விலை: 60.00
பக்கங்கள் - 24

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

Registered as a News Paper in Sri Lanka

GTV Express Parcel.lk
மகாராஜா பொதிகள் சேவை
நாங்கள் உங்கள் வீட்டுக்கு டெலிவரி செய்கிறோம்
(1335) 11kg க்கு மேல் 01kg க்கான கட்டணம்

| | | | |
|---|---|---|---|
| இங்கிலாந்து | - Rs.1400/= | அவுஸ்திரேலியா | - Rs.1700/= |
| ஜெர்மனி | - Rs.1900/= | சுவிஸ் | - Rs.2550/= |
| பிரான்ஸ் | - Rs.2000/= | இத்தாலி | - Rs.2250/= |

இல. 81A, பருத்தித்துறை வீதி, நெல்லியடி
இல.225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
GTV Enterprises (Pvt) Ltd | 011 4 654 444

# வலம்புரி

## சங்குநாதம்

சங்கு 26
ஒலி 227 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 18 ஞாயிற்றுக்கிழமை (03.08.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### வடக்கே இலங்கையில் அதிக வறுமைக்குட்பட்ட பிரதேசம்

# வட மாகாணத்தில் மூடப்படும் நிலையில் 70இற்கும் மேற்பட்ட பாடசாலைகள்

### அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்



(யாழ்ப்பாணம்)

வடக்கே இலங்கையில் அதிக வறுமைக்கு உட்பட்ட பிரதேசமாக காணப்படுவதோடு வட மாகாணத்தில் மூடப்படும் நிலையில் 70க்கும் மேற்பட்ட பாடசாலைகள் காணப்படுகின்றன என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்

23ஆம் பக்கம் பார்க்க

### முறையான திட்டமிடல் இன்மையே

# வட மாகாண கல்வி சீர்குலையக் காரணம்

### யாழில் இடம்பெற்ற புதிய கல்வி சீர்திருத்தத்தில் பிரதமர் ஹரிணி



(யாழ்ப்பாணம்)

முறையான திட்டமிடல் இன்மையே வட மாகாணத்தின் கல்வி சீர்குலைந்தமைக்குக் காரணம் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

(22ஆம் பக்கம் பார்க்க)

### பயங்கரவாதச் சட்டத்துக்கு மாற்றீடாகப் புதிய சட்டம்

#### தமிழரசுக் கட்சி எதிர்ப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு மாற்றீடாக புதியசட்டத்தைக் கொண்டுவரும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

23ஆம் பக்கம் பார்க்க

### செம்மணியில் மீட்கப்பட்ட சான்றுப் பொருட்களை

#### உரிய ஆவணங்களுடன் பார்வையிடலாம்

(யாழ்ப்பாணம்)

செம்மணியில் கண்டெடுக்கப்பட்ட சான்றுப் பொருட்களை எதிர்வரும் 5ஆம் திகதி பார்வையிட வருகை தருவோர் உரிய ஆவணங்களுடன் வருகை தரும் பட்சத்திலேயே அவர்களுக்கு மனித என்புக்கூடுகளை பார்வையிடுவதற்கு வாய்ப்பு வழங்கப்படும் என பாதிக்கப்

23ஆம் பக்கம் பார்க்க

### ஒழுங்கையில் நித்திரை கொண்டவர் டிப்பர் வாகனம் ஏறியதில் மரணம்

#### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா வடக்கு, பட்டிக்குடியிருப்புப் பகுதியில் ஒழுங்கையில் உறங்கிக் கொண்டிருந்த குடும்பஸ்தர் மீது டிப்பர் வாகனம் ஏறியதில் அவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா வடக்கு, பட்டிக்குடியிருப்புப் பகுதியில் உள்ள த ன து

23ஆம் பக்கம் பார்க்க

### மூன்று நாள் காய்ச்சல் இளைஞன் உயிரிழப்பு

#### நாவற்குழி தெற்கில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மூன்று நாள் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட இளைஞன் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் நாவற்குழி தெற்கு, கைதடியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் தேனுசன் (வயது- 29) என்பவரே உயிரிழந்தவராவார்.

23ஆம் பக்கம் பார்க்க

- அரசியல் கட்டுரைகள்
- ஆலடி மாநாடு
- வியாசர் பதில்கள்
- கவிதைக் கலசம்

இன்னும் பல அம்சங்களுடன்



சங்குநாதம் உள்ளே...

### சிறுவர்கள் இருவருடையது உட்பட

# 4 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் நேற்று அடையாளம்

(யாழ்ப்பாணம்)

18 வயதுக்குட்டபட்ட சிறுவர்கள் இருவருடைய மனித எச்சங்களுடன் உட்பட 4 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் புதிதாக நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணிப் புதைகுழி அகழ்வின் 2ஆம் கட்டத்தின் 28 ஆவது நாள் அகழ்வு நேற்று யாழ்ப்பாணம் நீதவான்

23ஆம் பக்கம் பார்க்க

### அம்பாந்தோட்டையில் துப்பாக்கிச்சூடு

#### ஒருவர் உயிரிழப்பு


(அம்பாந்தோட்டை)

அம்பாந்தோட்டை மாவட்டம் ஹங்கம, பிங்கம பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






WE ARE HIRING

## SOUS CHEF - FOX JAFFNA

Fox Resorts is a boutique chain of hotels specialising in authentic experiences and opportunities to explore some hidden gems around the island. Our two boutique properties in Jaffna and Kandy offer intimate getaways enveloped in breathtaking views, coupled with culinary feasts, unparalleled comfort and heartfelt hospitality.

### THE ROLE:

An opportunity has arisen for the Sous Chef (Executive) of Fox Jaffna. The selected candidate should be an established culinary figurehead with a clear vision of sustaining the hotel's positioning as the most preferred hotel in Jaffna for discerning guests, with the ability to create culinary masterpieces repeatedly and at scale, develop unique and popular menus, run an efficient operation whilst upholding quality and safety standards that drive guest satisfaction.

Key Responsibilities:
- Develop and implement menu costing strategies, ensuring profitability and efficiency.
- Successfully maintain food costs at or below predetermined rates.
- Plan and flawlessly execute diverse buffet spreads for various events and occasions.
- Confidently lead kitchen operations in the absence of the Executive Chef, maintaining high standards of quality and service.

Candidate Profile:
- 5 years experience in the industry with 2 years in the capacity of Sous Chef
- Degree in Hospitality Management or a related field
- Specialize in the preparation of exquisite Western and traditional Jaffna dishes
- Communication and leadership skills
- Guest orientated and eager to delight customers
- Environmentally minded and committed to hygiene and safety measures

*If you are a creative culinary professional with a strong understanding of cost control and have a knack for leadership, we want to hear from you!*

An attractive remuneration package including fringe benefits is on offer to the successful candidate.

**Send your resume to: careers@cmg.lk**

(Please mention "Fox Resorts" and the name of the vacancy on the subject of the email)

WWW.FOXRESORTS.COM

(4943)

## பைவர் மணவறைகள் விற்பனைக்கு

பைவர் மணவறைகள், அது சார்ந்த பொருட்கள், பிள்ளையார், தாமரைத் தொட்டி, தீபனாதி பொம்மை போன்ற அலங்காரப்பொருட்கள் விற்பனைக்குண்டு

(விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்)

(4946)

**077 978 9467**

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் சிறிய குடும்பத்திற்கு தங்கி இருந்து வீட்டு வேலை மற்றும் சமையல் செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.

சம்பளம் RS.30,000

தொடர்புகளுக்கு

(1407)

**077 165 8524**

## அண்ணா பொதிகள் சேவை

யாழ்ப்பாணம்



- UK - 1,350/- 16+
- France - 2,050/- 16+
- Germany - 1,950/- 16+
- Canada - 2,600/- 16+

தேவை

வேலையாட்கள் தேவை.

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

யாழ்.நகரத்துக்கு அண்மையில் இருப்போர் விரும்பத்தக்கது. (4949)

**075 330 5500 / 070 330 5500**

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378, 076 097 3127

## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை பிள்ளையார் கோயிலில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் நல்ல செம்மண் காணி விற்பனைக்குண்டு. 2 பரப்பு, 4 பரப்பு காணிகள் வீடு கட்டுவதற்கும் தோட்டம் செய்வதற்கும் உகந்தவை.

(4950)

தொடர்பு: **077 129 8159**



## நாகபூஷணி திருமண சேவை



உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் எம்மால் தெரிவு செய்து தரப்படும்.

**359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**

(துர்க்கா மணி மண்டபத்திற்கு அருகாமையில்,
லிங்கா பெஷன் எதிர் ஒழுங்கை)

**077 138 7596, 071 999 9306**

(C-3563)

# மணிவிழா வாழ்த்து





கிளிநொச்சி மாவட்டத்தில்

**37 வருடங்கள்** நிறைந்த சேவையாற்றி

கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரியில்

இருந்து 03.08.2025 இல்

ஓய்வுபெறும் **எமது முதல்வர்**

## திருமதி மீனலோஜினி இதயசிவதாஸ்

அவர்களை உளமார

வாழ்த்துகின்றோம்.

**கல்லூரிச் சமூகம்**

**கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி**

(C-3561)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(C-230)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புலிகளால் கொல்லப்பட்டவர்களே செம்மணியில் புதைப்பு

## சரத் வீரசேகர கண்டுபிடிப்பு

(கொழும்பு)

**செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தை இராணுவத்தின் மீது சுமத்துவதற்கு ஒருதரப்பினர் முயற்சிக்கிறார்கள் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.**



அவர் மேலும் கூறுகையில், இராணுவத்தின் உயர் அதிகாரிகள் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்படும்போது அவர்களை சிறைச்சாலையில் ஏனைய கைதிகளுடன் ஒன்றாக அடைக்காமல், வீட்டுக்காவலில் வைக்க முடியும்.

ஆனால் கைது செய்யப்பட்ட கடற்படையின் முன்னாள் தளபதி ஏனைய கைதிகளுடன் ஒன்றாக சிறைக்கூண்டில் அடைக்கப்பட்டுள்ளார்.

கடத்தி காணாமலாக்கப்பட்ட விவகாரத்தில் தான் கடற்படையின் முன்னாள் தளபதி சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத்தொடர் எதிர்வரும் மாதம் இடம்பெறவுள்ள நிலையில் இலங்கைக்கு அழுத்தம் பிரயோகிக்கும் நாடுகளை திருப்திப்படுத்துவதற்காகவா முப்படைகளின் முன்னாள் அதிகாரிகள் கைது செய்யப்படுகிறார்கள் என்ற சந்தேகம் காணப்படுகிறது.

விடுதலை புலிகள் அமைப்பினர் சித்திரவதை முகாம்களை நடத்தினர். விடுதலை புலிகள் அமைப்பில் இணைவதற்கு இணக்கம் தெரிவிக்காத தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

அவ்வாறு கொல்லப்பட்டவர்களின் உடல்கள் செம்மணி பகுதியில் புதைக்கப்பட்டிருக்கலாம் என அவர் தெரிவித்தார். (நி)

# முட்டைக்குள் ஊடுருவும் கிருமிகள் எச்சரிக்கும் சுகாதார பரிசோதகர்கள்

(கொழும்பு)

முட்டைகளைக் கழுவிய பின் சேமித்து வைப்பது நுகர்வுக்கு தீங்கு விளைவிக்கும் என்று பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது. முட்டைகளைக் கழுவுவது மேற்பரப்பில் உள்ள கிருமிகளை முட்டைகளுக்குள் மாற்றும் என சங்கத்தின் தலைவர் புலினா ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்து தெரிவித்த அவர், முட்டை ஓடு முழுமையாக மூடப்படவில்லை. இது மிகவும் நுண்ணிய துளைகளைக் கொண்டுள்ளது.

எனவே, முட்டைகளைக் கழுவும்போது, மேற்பரப்பில் உள்ள அழுக்கு, தூசி மற்றும் விலங்குகளின் கழிவுகள் தண்ணீரில் கரைந்து முட்டையின் உள்ளே நகரும். முட்டையின் உள்ளே புரதத்தின் மீது நுண்ணுயிரிகள் செல்லுமானால், அவை விரைவாக வளர்ந்து நச்சு நிலைமைகளை ஏற்படுத்தும்.

எனவே, முட்டைகளைக் கழுவிய பின் சேமித்து வைப்பது தீங்கு விளைவிக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# புலமைப் பரிசில் பரீட்சைக்கான மேலதிக வகுப்புக்களுக்குத் தடை

(கொழும்பு)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை இலக்காகக் கொண்டு நடத்தப்படும் அனைத்து மேலதிக வகுப்புகள், விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் எதிர்வரும் ஒகஸ்ட் 6ஆம் திகதி நள்ளிரவு முதல் தடை செய்யப்படும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. இந்த தடையை மீறும் ஆசிரியர்கள், பாடசாலைகள் அல்லது நிறுவனங்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர எச்சரித்துள்ளார்.

இந்நிலையில், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஒகஸ்ட் 10ஆம் திகதி நடைபெற உள்ளது. இந்தப் பரீட்சை நாடளாவிய ரீதியில் 2,787 பரீட்சை நிலையங்களில் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)


காணி விற்பனைக்கு

அரியாலை கிழக்கில் கடற்கரையோரமாக 10 ஏக்கரும், கடற்கரை உட்புறமாக 04 ஏக்கர் மேட்டுக் காணி விற்பனைக்கு உண்டு.

(4951)

தொடர்புகளுக்கு

077 491 3795



சிறந்த நிலம் விற்பனைக்கு!

- மீசாலை கிழக்கு — வீட்டு நிலம்
- அல்லாரை தெற்கு — வீட்டுடன் தென்னங்காணி
- கச்சாய் (புங்கடி) — வயல், தென்னங்காணி

விலை பேசத்தக்கது

தொடர்பு 0776 544 540

(சி-233)


# இலங்கையர்கள் மாலைதீவு செல்ல இலவச வருகை சுற்றுலா விசா

(மாலைதீவு)

சுற்றுலா நோக்கங்களுக்காக மாலைதீவுக்குச் செல்வதற்காக இலங்கை குடிமக்களுக்கு 90 நாட்களுக்கான இலவச வருகை சுற்றுலா விசாக்கள் வழங்கப்படும் என மாலைதீவு அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் மாலைதீவுக்கான அதிகாரப்பூர்வ விஜயத்துக்கு இணையாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த விசா வசதி ஜுலை 29 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருவதுடன் விசாவைப் பெற, இலங்கை பயணிகள் செல்லுபடியாகும் கடவுச்சீட்டை வைத்திருக்க வேண்டும் என்பதுடன் மாலைதீவில் தங்கியிருக்கும் போது அவர்களின் செலவுகளை ஈடு கட்ட போதுமான நிதியையும் கொண்டிருக்க வேண்டும்.

மாலைதீவு அதிகாரிகளின் கூற்றுப்படி, இந்த முயற்சி இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர ஒத்துழைப்பினை வலுப்படுத்தும் வகையில் வழங்கப்படுகிறது.

இது மாலைதீவு அரசாங்கத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான விசா வசதி வழங்குதல் ஒப்பந்தத்தின் விதிமுறைகளுக்கும், மாலைதீவின் குடிவரவு சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கும் உட்பட்டது.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் விஜயம், இலங்கையுடனான இருதரப்பு உறவில் தாங்கள் கொண்டிருக்கும் முக்கியத்துவத்தை மீண்டும் வலியுறுத்துகிறது என மாலைதீவு அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது. (நி)

# அரச உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து மகிந்த வெளியேறுவார்

## நாமல் தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை இரத்துச் செய்யும் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டவுடன் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரச உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து வெளியேறுவார் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதிகள் தொடர்பில் தீர்மானங்களை எடுக்கும் ஜனாதிபதி தனது எதிர்காலம் குறித்தும் அவதானம் செலுத்த வேண்டும்.

இந்த நாட்டில் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு இன்றும் பல்வேறு அச்சுறுத்தல்கள் காணப்படுகின்றன.

இந்த அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்து இராச்சியத்தை பலவீனப்படுத்தும் வகையில் செயற்படுகிறது. அரச அதிகாரிகள் சுயாதீனமான முறையில் செயற்பட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (நி)


# மரண அறிவித்தல்

திருமதி.

**செல்வமனோகரி மகேஸ்வரன்**



யாழ். உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி. செல்வமனோகரி மகேஸ்வரன் 01/08/2025 வெள்ளிக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலம் சென்ற செல்வராசா செல்வதிரவியம் ஆகியோரின் அன்பு மகளும் மகேஸ்வரனின் பாசமிகு துணைவியாரும் செல்வபாஸ்கரன், செல்வபாஸ்கரி, செல்வேந்திரன் செல்வரஞ்சினி, செல்வதேவி, செல்வவதனி, செல்வகுமார் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கலாவல்லி, கணேசமூர்த்தி, பத்மலோஜினி, விநாயகமூர்த்தி மகேசன், ஈஸ்வரகுமார், வஸ்கலா, யோகேஸ்வரி, பரமேஸ்வரன், பரமேஸ்வரி ,மகேஸ்வரி, காலஞ்சென்ற செல்வராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் அபிராம், அபீசன், அபிசயன், அபிராஜ், அபிலாஷ், ஆரபி, அக்சயா, அக்சனா, அபிசனா ஆகி யோரின் பாசமிகு மாமியாரும் கிருத்திகா, கார்த்திகா, துசாந், துசாந்தி ஆகியோரின் பாசமிகு சிறிய தாயாரும் கோகுல் சந்தோஷ், மதுமிதா ஆகியோரின் பாசமிகு பெரிய தாயாரும் ஆத்விக் இன் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள். இன்று 03.08.2025 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக. கரும்பவாளி இந்து மயானத்திற்கு மு.ப 10.30 மணியளவில் எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அறியத் தருகின்றோம்.

15 ஆம் கட்டை,
உடுப்பிட்டி.

தகவல்-குடும்பத்தினர்
075 280 6824,071 829 7207


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் நடைபெற்றால் அதில் அழிவு ஏற்படுவது சகஜம் என்று கூறுவார்கள். தமக்கு அந்நிலை ஏற்பட்டிருந்தால் அவ்வாறு அவர்களினால் கூறமுடியுமா?

தமிழினம் ஈனப்பட்ட இனம் என்பதற்காய் அவர்களை எவரும் எதுவும் செய்யலாம் என எவர் நினைத்தாலும் அவர்களுக்கு கடவுளின் தண்டனை நிச்சயம் கிடைக்கும்.

அந்தளவிற்கு தமிழினம் பட்ட வலி மிகப்பெரியது. காலம் காலமாக ஆட்சிக்கு வந்தவர்கள் தமிழினத்தின் மீது காட்டுமிராண்டித் தனத்தை கட்டவிழ்த்துவிட்டனரே தவிர, அவர்களும் இந்த மண்ணின் மைந்தர்கள் என்று சற்றும் சிந்திக்கவில்லை.

பயங்கரவாதத்தை அழிக்கின்றோம் என்று ராஜபக்ஷக்களினால் தொடுக்கப்பட்ட போரில் அப்பாவி உயிர்கள் இலட்சக்கணக்கில் பறிபோயின என்ற உண்மை மூடி மறைக்கப்பட்டுவிட்டது என எவர் கருதினாலும் அது பூனை கண்ணை மூடிக்கொண்டு பால் குடித்ததற்கு ஒப்பானதே.

இந்திய காங்கிரஸ் அரசின் கோர முகத்திரை கிழிக்கப்பட்டது இறுதி யுத்தத்தில் என்பதை எவராலும் மறைத்துவிட முடியாது.

விடுதலைப் புலிகள் மீதிருந்த வெறுப்பின் காரணமாக அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவதை கண்டுகொள்ளாமல் இலங்கைக்கு ஆயுத உதவிகளை வழங்கிய கொடுமைத் தனங்களை தமிழினம் ஒரு நாளும் மறக்காது, மன்னிக்காது.

போர் நிறுத்தப்பகுதி என அடையாளப்படுத்தி அங்கு இலட்சக்கணக்கான மக்களை ஒன்று சேர்த்து, பொதுமக்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்திய கொடூரங்கள் ஈழத்தைவிட வேறு எங்கும் நடந்திராது.

இந்தக் கொடூரங்களை மேற்கொண்டது எமது சொந்த நாட்டுப் படைகள் என்பதுதான் சகிக்கமுடியாத உண்மை.

வன்னிப் பெருநிலப்பரப்பில் போர்குற்ற மீறல்கள் பயங்கரமாக நடந்தது என்பது சர்வதேசத்திற்கு வெளிச்சமாயினும் அது இன்று வரை சாத்தியமற்ற ஒன்றாகவே காணப்படுகின்றது.

போர் நிறைவுற்று தசாப்தம் கடந்த நிலையில் இன்றுவரை நீதிக்காக ஏங்கும் இனமாக தமிழினம் இருப்பது சர்வதேசம் வெட்கித் தலை குனியும் செயல்.

போர் நிறைவுற்றதன் பின்னர் அமெரிக்காவினால் ஐ.நாவில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

குறித்த தீர்மானம் மிகப்பலம் பொருந்திய தீர்மானமாக இருந்த போதிலும் அமெரிக்க எதிர்ப்பு நாடுகளின் எதிர்ப்பினால் அது நமத்துப் போனது.

போர் வெற்றி வீரர்கள் என வர்ணிக்கப்பட்ட வெற்றி நாயகர்களான ராஜபக்ஷக்களின் வீழ்ச்சியின் பின்னர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான நல்லாட்சி அரசு மலர்ந்தது.

இக்காலத்தில் பிரதான எதிர்க் கட்சியாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு விளங்கியது. எதிர்க்கட்சித் தலைவராக அக்கட்சியின் தலைவர், மறைந்த இரா.சம்பந்தன் இருந்தார்.

தமிழினத்துக்கு நீதி கிடைக்கக்கூடிய பொன்னான காலம் அது. ஆயினும் அந்த வாய்ப்பை தவறவிட்டமை எம் தமிழ் தலைமையின் ஆளுமைத் தன்மையின் வீழ்ச்சியை எடுத்தியம்பியது.

என்ன செய்வது அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கயிற்றை விழுங்கியதன் விளைவே இது என அப்போதைய அரசியல் ஆய்வாளர்கள் தமிழ்க்கட்சித் தலைமையை விமர்சித்திருந்தமை இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவது சாலப் பொருந்தும்.

அக்காலப்பகுதியில் ஐக்கிய நாடுகள் சபை அமர்வில் இலங்கை அரசு மீது எமக்கு நம்பிக்கையுண்டு. அவர்கள் பொறுப்புக்கூறுவதற்கு அவகாசம் தேவை. அந்த அவகாசத்தை சர்வதேசம் இலங்கைக்கு வழங்க வேண்டும் எனக்கோரியது தமிழ்த் தலைமை.

பாதிக்கப்பட்ட இனத்தின் பிரதிநிதிகளே, இலங்கை அரசை நம்புவதாகவும் அவகாசம் வழங்குமாறும் கூறும்போது அதை சர்வதேசம் சாதகக் கண் கொண்டு பார்த்தது.

ஆயினும் பொறுப்புக்கூறல் வெறும் காலக் கடத்தலாக மாறிப்போக நல்லாட்சி அரசு நலிந்து போனது.

அதன்பின் வந்த எந்த அரசுகளும் தமிழர் விடயத்தில் கவனம் செலுத்தத் தவறியதுடன் தவறு செய்தவர்களை பாதுகாக்கும் செயலில் தாராளமாய் ஈடுபட்டனர்.

இலங்கையில் ஆட்சி மாற்றம் நிகழ்வது சர்வ சாதாரணமான விடயமாக இருந்தது. ஆனால் அது தமிழர் வாழ்வில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என்பது தெளிவு.

யார் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தாலும் அவர்கள் தமிழர்களைப் பார்க்கும் பார்வை ஒன்றாகவே இருந்தது.

இந்த ஒரு விடயமே இலங்கையில் இன முறுகல் இருந்துவரக் காரணம் எனலாம். ஆம், தமிழர் என்றால் பயங்கரவாதிகள். சிங்களவர்களுக்கு எதிரானவர்கள் என்ற அவர்களின் குறுகிய பார்வை ஒருநாளும் விலகவில்லை.

தற்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்திருக்கிறது.

கடந்த வருடம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அமர்வில், இலங்கை விடயம் பேசுபொருளான போது, சர்வதேச விசாரணை என்ற பேச்சுக்கே இடமில்லை என கூறியிருந்தது அநுர அரசு.

ஆக, அவர்களும் தமிழர்களை அதே கண் கொண்டு பார்க்கின்றனரோ என தமிழினம் எண்ணத்தலைப்பட்டுள்ளது. நிலை இவ்வாறு இருக்கையில் எதிர்வரும் செம்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற சர்வதேச மட்டத்தில் காய் நகர்த்தல்கள் நடைபெறுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்தவகையில்ல் ஐக்கிய இராஜ்ஜியத்தின் தலைமையிலான இணை நாடுகள் இலங்கைக்கு எதிராக ஐ.நாவில் தீர்மானம் நிறைவேற்றவுள்ளனர்.

இதில் ஐக்கிய இராஜ்ஜியம், கனடா, மாலாவி, மன்டேனிக்ரோ, வடமாசிடோனியா ஆகிய நாடுகள் இணைந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

இந்த விடயம் தொடர்பில் தமிழினம் விழிப்பாய் இருக்க வேண்டிய கட்டம் இது. உடைந்து போன கண்ணாடித்துண்டுகள் போல பிரிந்து நிற்கும் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒற்றுமைப்பட வேண்டிய தேவைப்பாட்டை உணர்ந்துகொள்ள வேண்டும்.









# சர்வதேசத்தை தமிழினம் நம்பலாமா?



**அபிமன்யு**

> "தமிழினத்தின் மீதான இன அழிப்பை மழுங்கடிக்கும் செயலை எவர் மேற்கொண்டாலும் அது கடவுளுக்கும் அடுக்காத செயல் என்றே பொருள்."

மீண்டும் மீண்டும் நாம் எமது அரசியல் எதிர்காலத்துக்காய் மட்டுமே செயற்படுவோம் என்று அடம்பிடிப்பார்களாயின் நிச்சயம் மேற்கண்ட தீர்மானம் தோற்றுப்போக வாய்ப்புகள் அதிகம்.

இவ்விடயத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றித்து சர்வதேச நாடுகளின் தலைவர்களை, அவர்கள் பிரதிநிதிகளைச் சந்தித்து தமிழினத்துக்கு நடந்த அநீதிகளை எடுத்துக் கூறவேண்டும். ஏலவே அவர்களுக்குத் தெரிந்த விடயமாயினும் அதன் அவசரத் தன்மையை புரியவைக்க வேண்டும். அப்போதுதான் எமக்கான ஆதரவு ஐ.நாவில் கிடைக்கும். ஏனெனில் இஸ்ரேல், காசா மீதான காட்டுமிராண்டித் தனமான போர், ரஷ்யா, உக்ரைன் போர் என்பன ஈழத்தமிழர் விடயத்தை மழுங்கடிக்கச் செய்து விடலாம்.

ஆதலால் எமக்கான ஆதரவை நாம் பெற்றுக்கொள்ள இப்போதே செயற்பட வேண்டும். ஏற்கனவே காலம் கடந்து விட்டது. இன்னும் காலம் கடந்தால் அது தமிழினத்துக்கான நீதியைப் பாதிக்கும் என்பது நிறுதிட்டமான உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



## கண்மருத்துவ நிபுணர் மலரவனுக்குப் பாராட்டு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** பொருத்தமான கல்விச் சீர்திருத்தம் வருவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேணும்.

பாராளுமன்றத்தில ஜனாதிபதி அநுரகுமாரதிசாநாயக்க கூறியது போல, பிள்ளைகளை நாங்கள் றோபோக்கள் போல தான் வளர்த்துக் கொண்டு வாறம்.

**பண்டிதர்:-** அது மட்டுமல்ல எங்கட கல்வி முறையில சமத்துவமற்ற போக்குக் காணப்படுகிறது.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில படிக்கிற ஒரு மாணவனுக்குக் கிடைக்கிற கற்றல் வாய்ப்புக்கள் தீவகத்தில உள்ள பிள்ளைகளுக்குக் கிடைப்பதில்லை.

அதிலும் குறிப்பாக புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு, எழுவைதீவு, அனலைதீவு போன்ற கடல் சூழ் தீவுகளுக்கு ஆசிரியர்களை அனுப்புவதிலேயே பெரும் இடர்பாடுகளைச் சந்திக்க வேண்டியுள்ளது.

**கங்காணி :-** அதெண்டால் உண்மை தான். முந்தின காலத்தில அந்த ஊரைச் சேர்ந்த அதிபர், ஆசிரியர்கள் பாடசாலைகளை நடத்தியிருக்கினம்.

அனலைதீவு சதாசிவம் மகாவித்தியாலயத்தின்ர அதிபராக இருந்த காராளபிள்ளை அனலைதீவைச் சேர்ந்த கல்விமான். அவர் அங்கேயே இருந்தார்.

அதுபோல புங்குடுதீவு மகா வித்தியாலய அதிபர் வில்வரட்ணம் புங்குடுதீவில வாழ்ந்தவர்.

இதுபோல அந்தந்த ஊரைச் சேர்ந்த ஆசிரியர்கள் தத்தம் பாடசாலைகளில கடமையாற்றினதால தீவகப் பாடசாலைகள் உச்சமாக இயங்கின.

இப்ப தீவகத்தைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணத்தில இருக்கினம். இதால தற்போது தீவகத்தில இருக்கிற மாணவர்களுக்கு பாடசாலைக் கல்வி கிடைப்பது போதுமானதாக இல்லை. இதால எங்கட கல்வி கடும் வீழ்ச்சி நிலையைக் கண்டுள்ளது.

**வாத்தியார்:-** எங்கட வட மாகாணத்தின்ர கல்வி வீழ்ச்சிக்கு ஒரு சில ஆசிரியர் தொழிற்சங்கங்களும் காரணம் என்பதை நாங்கள் உணராமல் இருக்கிறம்.

உண்மையில எங்கட தமிழ் மாணவர்களின்ர கல்வியை விழ்த்திறத்தில சில ஆசிரியர் சங்கங்கள் திட்டமிட்டுச் செயற்படுகின்றன.

இன்னும் சுருக்கமாகச் சொன்னால், தமிழ் மாணவர்களின் கல்வியை அழிக்க வேணும் எண்ட நோக்கத்தில செயற்படுகிற பேரினவாதிகளின்ர கூலிகளாக இயங்குகிற சில ஆசிரியர் சங்கங்கள் எங்கட மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்கு மூல காரணமாக உள்ளன.

எனினும் இது பற்றி நம்மவர்கள் அறியாமல் இருப்பது தான் மிகப் பெரும் அபத்தம். இவ்வாறு வாத்தியார் கூற, ஆலடி நிசப்தமாகியது. நிசப்தத்தைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** ஓ! எங்களிட்ட உள்ள பெரும்பாலானவர்களிடம் உண்மையான இனப்பற்றும் இல்லை. சமயப் பற்றும் இல்லை. அப்படியான பற்றுதல்கள் இருந்தால், எங்கட நிலை இப்படியோ இருக்கும்.

உலகம் முழுக்கத் திரும்பிப் பார்க்கிற நல்லூர்க்கந்தப் பெருமானின் திருவீதிக்கு மண் பரப்புவதற்குக் கூட மண்தர மறுக்கிற நிலைமை இருக்குது.

அதைவிட, போன வருடம் நல்லூர் வீதியில பாவித்த மணலை இந்த வருடம் பாவித்தால் என்ன எண்டு கேட்கினம்.

உண்மையில நல்லூர் வீதிக்கு மண்பரவுவதின்ர நோக்கம் அங்கப்பிரதட்சணம் செய்பவர்களின்ர உடம்பில கல்லுகள், முள்ளுகள் குற்றாமல் இருக்கத் தான்.

உண்மையில பழைய மண்ணைப் போட்டால், அதில இருக்கிற கிருமித் தொற்றுக்களால, பிரதட்சணம் செய்கிறவர்களுக்கு தோல் வியாதிகள் மற்றும் ஒவ்வாமை வரக் கூடிய வாய்ப்பு இருக்குது.

ஆகையால எதையும் எழுந்தமானமாகக் கதைக்கலாம் எண்டு நினைக்கிறது நியாயத்துவமானதல்ல.

இவ்வாறு விதானையார் விசுவலிங்கம் கூற, ஆலடி மீண்டும் நிசப்தமாகியது. நிசப்தத்தை கங்காணி கார்த்திகேயன் ஊடறுத்தார்.

**கங்காணி:-** எங்கட யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில கண்புரைக்கான சிகிச்சை மிகச் சிறப்பாகவும் விரைவாகவும் நடக்கிறதைப் பார்த்து உண்மையில பிரமிப்படைந்தன்.

கண் வைத்திய நிபுணர் மலரவனும் அவரது மருத்துவக் குழுவும் கற்றாக் சத்திர சிகிச்சையை மிகத் துரிதமாகவும் சிறப்பாகவும் செய்து வருகினம்.

அதோட முன்பெல்லாம் கண்ணுக்கு வைக்கிற லென்ஸ் வெளியில வாங்கிக் கொடுக்க வேணும்.

ஆனால் இப்ப அந்த லென்ஸை யாழ். போதனா வைத்தியசாலை இலவசமாக வழங்குகிறது.

உண்மையில கற்றாக் சத்திர சிகிச்சையை வெளியில செய்யிறதாக இருந்தால் ஏகப்பட்ட பணம் செலவாகும்.

ஆனால் கண் மருத்துவ நிபுணர் மலரவன் அந்த சிகிச்சையை யாழ். போதனா வைத்திய சாலையில வைத்து விரைவாகச் செய்வதால எத்தனையோ ஏழைகள் நன்மை பெறுகினம்.

இந்த இடத்தில கண் மருத்துவ நிபுணர் மலரவனையும் அவரது மருத்துவக் குழுவையும் பாராட்ட வேணும்.

இவ்வாறு கங்காணி கூற, ஆலடியில் இருந்த அனைவரும் எழுந்து தமது பாராட்டையும் நன்றியையும் தெரிவித்து அமர்ந்தனர்.

**மூப்பர்:-** அது சரி யாழ்ப்பாணத்தில இருக்கிற ஒரு உணவுச்சாலையின்ர கழிவு நீர் குளத்தில விடப்பட்டதாக அறிந்தன் உண்மை தானோ.

**சாத்திரியார்:-** ஓ! அது தொடர்பில அந்த உணவு விடுதிக்கு அருகில இருக்கிற மக்கள் மிகப் பௌவியமாக அந்த உணவுச்சாலை நிர்வாகத்திட்ட எடுத்துக் கூறி இருக்கினம்.

ஆனாலும் அந்த நிறுவனம் பொறுப்பாகச் செயற்படவில்லை.

இதால அந்தச் சனங்கள் தங்கட மாநகரசபை உறுப்பினரை அழைத்து நிலைமையைக் கூறியிருக்கினம்.

இப்ப அந்த உணவுச்சாலைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும் அறிந்தன்.


இவ்வாறு சாத்திரியார் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நித்திரை கொள்ளாது இருக்க என்ன செய்ய வேண்டும் வியாசரே?







மன்னாரைச் சேர்ந்த வினுஜன் விமானி யானது பற்றி வியாசரின் கருத்து?

**"முத்தமழை இங்கு கொட்டித் தீராதா..." பாடலை எழுதிய பாடலாசிரியர் யார் வியாசரே?**

குமாரலிங்கம்-நல்லூர்

பாடலாசிரியர் சிவா ஆனந். இவரை இயக்குநர் மணிரத்தினத்தின் ஆஸ்தான பாடலாசிரியர் என்று கூறலாம்.

மணிரத்தினத்தின் செக்கச் சிவந்த வானம், பொன்னியின் செல்வன் போன்ற படங்களில் இணை இயக்குநராகவும் பாடலாசிரியராகவும் பணியாற்றியவர்.

கமலின் தக் லைவ் இல் முத்தமழைப் பாடலை எழுதி மிக உச்சத்துக்குச் சென்று விட்டார்.

இது குறித்து அவர் கூறும் போது முத்த மழைப் பாடலை பத்து சரணம் பத்து பல்லவியாக எழுதி ரகுமானிடம் கொடுத்ததாக கூறியிருந்தார்.

**வியாசரே இராமனாக வாழ்வதா? இராவணனாக வாழ்வதா மிகவும் கஷ்டமானது?**

ரிதுஷ்-வதிரி

இராமன் ஏகபத்தினி விரதன். அவன் தன் மனைவி சீதையைத் தவிர இன்னொரு பெண்ணை ஏறெடுத்துப் பார்த்திலான்.

இராமனின் தன்மை இதுவென்பதில் பெருமை கொள்வோமாயினும், இராவணன் சீதையைக் கவர்ந்து வந்து அயோத்தியில் சிறை வைத்திருந்தான்.

இராமனை மறந்து என்னை மணம் செய் என்று சீதையிடம் கேட்டானேயொழிய சீதையை அடைய வேண்டும் என்று, அவள் விருப்பம் இன்றி அவளின் நிழலைக் கூட இராவணன் நெருங்கியது கிடையாது.

இராமனைப் போலவோ இராவணன் போலவோ எவராவும் வாழ்ந்து விட முடியாது. அந்த வாழ்க்கை தான் காவியம்.

**மன்னாரைச் சேர்ந்த வினுஜன் விமானி யானது பற்றி வியாசரின் கருத்து?**

கனேஷ்-பருத்தித்துறை

எமது தேசத்து இளைஞர்கள் சாதனை படைக்கும் போது மனதில் இனம்புரியாத இன்பம் இளையோடவே செய்கிறது.

ஏனெனில் வாழ்வில் வெற்றியைப் பார்ப்பதற்கு தமிழினம் பட்ட துன்பங்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

இற்றைக்குப் 16 வருடங்களுக்கு முன்னர் எமது இளைஞர்கள் எந்தவித அடிப்படை தொழில்நுட்பங்கள் ஏதும் இல்லாமல் வானில் பறந்து எம் இனத்தைப் பெருமைப்படுத்தினர்.

அந்தக் கனவை வினுஜன் நினைவாக்கி இருக்கிறார். நிச்சயம் தமிழ் தாய் மகிழ்வாள். தமிழ் இளைஞர்கள் இன்னும் பல வெற்றியைக் காண வேண்டும். அப்போது தான் மாண்டு போன எம் வீரர்களின் கனவுகள் மெய்ப்படும்.

**நட்பின் ஆழம் பற்றி வியாசர் கூறக் கேட்டால் சிறப்பு?**

மிரஷ்மன்-யாழ்ப்பாணம்

மூன்று வருடங்களுக்கு முன்னர் இரணைமடுக்குளத்தில் மூழ்கி இரண்டு இளைஞர்கள் உயிரிழந்தனர்.

குளக் கரைக்குச் சென்ற நண்பன் கால் தடக்கி பீறிட்டு பாயும் நீரில் வீழ்ந்து விட நண்பனைக் காப்பாற்றுவதற்காக குறித்த மற்றைய இளைஞனையும் நீர் அடித்துச் சென்று விட, இருவரும் சடலமாக மீட்கப்பட்டனர்.

நட்பின் ஆழம் என்பது அதுதான். எவ்வளவு ஆபத்து நிறைந்த இடமாயினும் தன் நண்பனுக்கு ஆபத்து எனின் எதைப்பற்றியும் சிந்தியாமல் அந்த இடத்தில் அவனைக் காப்பாற்றி விட துடிக்கும் உள்ளம் தான் உயரிய நட்பு.

இந்த அர்ப்பணிப்பு நட்பைத் தவிர வேறு எந்த உறவிலும் இருக்கவே இருக்காது.

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
0076 097 3126
என்ற இலக்கத்திற்கு
SMS, Whats App செய்யுங்கள்

**தன்பால் திருமணம் நடப்பது அதிகரித்து விட்டது. இது தொடர்பில் வியாசரின் கருத்தென்ன?**

இராஜேந்திரம்-முகமாலை

கலி முத்தினால் கண்டதும் நடக்கும் என்பார்கள். எந்தக் கறுமாந்தரங்கங்கள் எம் சமூகத்தில் நடக்கக் கூடாதோ அவை எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன.

இறைவனின் படைப்பு எதுவோ அதுவே உலகின் இயக்கம். அந்த இயக்கத்துக்கு மாறாக மனிதன் நடந்து கொண்டால் பிரளயத்துக்கு வழி வகுக்கும்.

இது கூடப் பிரளயத்தின் ஒரு நிலைதான் போலும்.

**நித்திரை கொள்ளாது இருக்க என்ன செய்ய வேண்டும் வியாசரே?**

லகோசன்-மல்லாகம்

1990 களில் TV யைப் பார்ப்பதே அரிது. எங்காவது TV போட்டால் ஐந்து படம் விடிய விடிய ஓடும்.

அன்றைய தினம் அந்த ஊரே திருவிழாக் கோலம் பூண்டிருக்கும். எந்தெந்தப் படம் ஓடுகிறது, எந்த ஒழுங்கில் படம் போடுவார்கள் போன்ற தகவல்களை அறிந்து அதற்கேற்றாற் போல் படம் பார்க்க வருவார்கள்.

வரும் போது பாய், பெட்சீற் இவற்றுடன் போத்தலில் தண்ணீரும் கொண்டு வருவார்கள்.

ஐந்து நிமிடங்களுக்கொரு தடவை முகத்தை தண்ணீரினால் கழுவினால் நித்திரை வராது. விடிய விடிய படம் பார்க்கலாம் என்று அவர்கள் பலமாக நம்பினார்கள்.

உங்கள் கேள்வியைப் பார்க்கும் போது இதுவே என் நினைவில் வந்தது லகோசன்.

**இப்போது பல துறவிகள் சுவாமியாக விரும்புவதில்லையே வியாசரே ஏன்?**

ஷமிக்ஷன்-மானிப்பாய்

காட்டில் ஒரு துறவி தவம் செய்து கொண்டிருந்தார். ஒரு வழிப்போக்கன் கோவணத்துடன் வருவதைக் கண்ட துறவி, தனது வேஸ்டியில் பாதியைக் கிழித்துக் கொடுத்து விட்டு மிகுதியை தான் கட்டிக் கொண்டு மீண்டும் தவத்தில் ஆழ்ந்தார்.

திடீரென கண் விழித்தார். அவன் துறவியின் மிகுதி வேஸ்டியையும் உருவிக் கொண்டு ஓடினான்.

துறவிக்கு துக்கம் நெஞ்சை அடைத்தது. அட்டா பற்றற்ற துறவியாகிய நான் வேஸ்டியை முழுவதுமாய் அவனிடம் கொடுக்காமல் விட்டதால் ஒருவனைத் திருடன் ஆக்கிவிட்டேனே என தன்னை நொந்து கொண்டார்.

தற்போது எந்தத் துறவிகளிடம் இவ்வாறான பொதுச் சிந்தனை இருக்கிறது.

**ராஜாக்கள் மந்திரிகளுக்கு பயம் என்பது உண்மையானதா வியாசரே?**

திவாகரன்-சீரணி

ராஜாக்களின் அந்தப்புரத்து மந்திர, தந்திரங்கள் அனைத்தையும் நன்கு அறிந்தவர்கள் மந்திரிகளல்லவா?

அதனால் எப்போதும் ராஜாக்கள் மந்திரிகளிடம் கொஞ்சம் ஜாக்கிரதையாகவே இருப்பார்கள். மந்திராலோசனை என்ற பெயரில் ராஜாக்களை அதட்டுவதில் மந்திரிமார் பலே கில்லாடிகள்.

இவற்றை விட மந்திரிகளின் வாள் தன் பக்கம் திரும்பி விடும் என்ற பயம் ராஜாவிடம் இருக்கவே செய்யும்.

அனைத்தையும் கடந்து நாட்டை ஆட்சி செய்வதென்பது சர்வ சாதாரணமான விடயம் இல்லையே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்


## அன்பு வாசகர்களே!

உங்கள் அபிமான
சங்குநாதத்தில் நீங்களும்
எழுதலாம்...

☑ அரசியல் ☑ இலக்கியம்
☑ கவிதை ☑ கட்டுரை

ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.

ஆசிரியர், வலம்புரி - சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126



## உனக்கு நினைவிருக்கிறதா



நினைவிருக்கிறதா...
நினைவிருக்கிறதா...
அந்த... அழகிய
நிலவின் ஒளியில்...
ஆடிப்பாடி
விளையாடிய
இனிய நாட்கள் உனக்கு...
நினைவிருக்கிறதா...?
முற்றத்து மணலில்
குந்தியிருந்து
பல கதைகள் பேசி
அம்புலிக்கு...
கல்லெறிந்து...
வம்பழந்த அந்த
நாட்கள் உனக்கு...
நினைவிருக்கிறதா...?
பக்கத்து வீட்டின்
வளவில்
கல்லெறிந்து
பிடுங்கி சுவைத்த
மாங்காயின் ருசி...
உனக்கு...
நினைவிருக்கிறதா?
மாரி காலத்து
மழையில் நனைந்து
ஓடும் நீரில்
வெள்ள மடித்து
சட்டை நனைந்து
பள்ளி ஆசிரியரிடம்
சாட்டை அடி
வாங்கியது
உனக்கு...
நினைவிருக்கிறதா...?
முச்சந்தியில் கிளித்தட்டு
விளையாடி அடிதடியில்
முடிந்து சமாதானம்
பேசி நண்பர்களானது
உனக்கு நினைவிருக்கிறதா...?

க.நாகேஸ்வரா,
சண்டிலிப்பாய்.

## ஊடகச் செய்திகளாய் உலா



அடிதடியும் வாள் வெட்டும்
ஐஸ்போதை கஞ்சா
கடத்தலும்
குடிவெறியில்
தெருக் கும்மாளமும்
வீச்சு வாளால் கேக்
வெட்டலும்
விபத்தும் குடிமயக்கத்தில்
சாரத்தியமும்
மண் கடத்தலும்
கையூட்டு வாங்குதலும்
கட்டிய மனைவியின்
கழுத்தை நெரிப்பதும்
கள்ளக் காதலும்
தகாத உறவும்
வாங்கிய கடனுக்கு
பாலியல் இலஞ்சமும்
பத்து வயதுச் சிறுமி
தாயாகிய கொடுமையும்
அந்நிய நாடு புகுந்த
பயங்கரவாதிகள்
பெண்டிர் பிள்ளைகளை
அள்ளிப் போனதும்
பசியோடு தட்டுடன் நின்ற
சிறுவர் மீது
குண்டு வீசி கொன்ற
கொடூரச் செயலும்
ஊடகச் செய்திகளாய்
உலா வருகையில்
சமூக விரோதியாய்
கணிக்கப்படுவோரை
ஊக்குவிக்கவே செய்யும்
இந்தச் செய்திகள்
மறச்செய்திகளை
மக்கள் விரும்பினால்
அறம் இந்த
அகிலத்தை விட்டே ஏகும்

பிரமன், கொக்குவில் மேற்கு, கொக்குவில்.



## அசுர குணங்களும் அரக்க தனங்களும்



புதைந்து கொண்டிருக்கின்ற
மனித உணர்வுகள்
புரிந்துகொள்ளப்பட முடியா மனித சமூகம்
வில்லங்கம் இல்லாமல் விலங்குகள்
ஒன்றையொன்று கொல்வதேயில்லை
பசிக்காக அவை உண்பதைத் தவிர
அசுர குணங்களும் அரக்க தனங்களும்
இரத்தத்தில் குளித்து மகிழ்கின்றன
அவசர உலகில் நின்று நிதானிக்க முடியாது
ஓடிக்கொண்டு இருக்கும்
மனித சமூகம்,
அடுத்தவன் துயர்களில்
மனமகிழ்கின்ற மனிதக் கூட்டம்!

மனித உரிமைகள் பற்றிப்
பெரிதாகப் பேசினாலும்
சிறு துரும்பைக்கூட அசைக்கமுடியாத
அவலம் - புதிய கொல் களங்கள்
திறந்து விடப்பட்டுக் கொண்டேயிருக்கின்றது
உலகில்இரத்த ஆற்றில் குளித்து
மகிழ்ந்து கொண்டிருக்கின்றன சாத்தான்கள்.

[illegible] கொக்குவில்.

## கலக்கும் கந்தர்...



கல்யாண வீட்டுக்கு கந்தரும் சொல்லாது
கல்யாணம் செய்ததுவே சொந்தங்கள் - சொல்லாமல்
சென்றாரே கல்யாண வீட்டுக்கு கந்தருமே
நன்றாக சங்கிலியும் போட்டு

நன்றான சங்கிலியை நன்றாகப் பார்த்தவரும்
நின்றவர்க்கு முன்வரிசை நாற்காலி - நன்களித்து
கந்தரையும் சொந்தமென கொண்டாடி நின்றனரே
கந்தரது பித்தளையைக் கண்டு.

கவிவேந்தர் பொன்.சுகந்தன்

## பென்னாம் பெரிய ஆசை



பெரிய பெரிய ஆசை
பென்னாம் பெரிய ஆசை
பழைய சோறும் பச்சடி சம்பலும்
பிசைந்து சாப்பிட ஆசை
பழந் தண்ணீரில் பச்ச மிளகாய்,
வெங்காயம் கசக்கி பருக ஆசை
ஒடியற் கூழ், சிவப்பரிசிக் கஞ்சி
காய்ச்சி குடிக்க ஆசை
பனம் பழம், பனம் பணியாரம்
சுட்டு சாப்பிட ஆசை
உரலில் இடித்த இலுப்பம் பூ
துவையல் சாப்பிட ஆசை
குரக்கன், சாமி, வரகரிசி
வறுத்துத் தின்ன ஆசை
மரவள்ளிக் கிழங்கவித்து
ருசித்துத் தின்ன ஆசை
பனாட்டு, பனங்கட்டி - நுங்கும்
பகிர்ந்து சாப்பிட ஆசை
துலா மிதித்து கிணற்றில் தண்ணீர்
அள்ளி குளிக்க ஆசை
மாட்டு வண்டியில் சோக்கான
பயணம் செய்ய ஆசை
சிட்டுக்குருவி தூக்கணாங்குருவி
பறப்பதை பார்த்து ரசிக்க ஆசை
மாலைப் பொழுதில் நண்பர்களோடு
அரட்டை அடிக்க ஆசை
நான் எழுதும் கவிதைகளை
ஏனையோர்
எனக்கு படித்துச் சொல்ல ஆசை
இப்படி...,
பெரிய பெரிய ஆசை,
பென்னாம் பெரிய ஆசை

சாந்தையூரிவன்
தி.ராம்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான பாதை

## பகுதி - II : இலங்கையின் பொருளாதார நெருக்கடி: கற்றுக்கொண்ட பாடங்களும் மீட்சிக்கான செயற்றிட்டமும்

சென்ற வாரக் கட்டுரையின் தொடர்ச்சியாக பன்னாட்டு நாணய நிதியம், இலங்கை அரசு மற்றும் இலங்கை மத்திய வங்கி சேர்ந்து நடத்திய "இலங்கையின் மீட்சிக்கான பாதை: கடன் மற்றும் ஆளுகை" மாநாட்டின் முதலாம் அமர்வின் தொடக்கத்தில் இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் கலாநிதி சந்திரநாத் அமரசேகர அவர்கள் நாடு முகங்கொடுத்த நெருக்கடி, அதனைத் தொடர்ந்து பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பொருளாதாரத்தின் மீட்சி பற்றிய ஓர் வெளிப்பாட்டினை வழங்கினார். அதற்குப் பின்னர் அவரை நடுவராகக்கொண்டு பன்னாட்டு நாணய நிதியத்தின் ஆசியா மற்றும் பசுபிக் திணைக்கள பணிப்பாளர் கலாநிதி கிருஷ்ணா சிறினிவாசன், திறைசேரிச் செயலாளர் (முன்னைய) திரு. மகிந்த சிறிவர்தன, வறுமை ஒழிப்பிற்கான நிலையத்தின் தலைவர், தலைவர் பேராசிரியர் சிறிமல் அபேரத்ன மற்றும் இலங்கை வங்கியாளர்கள் சங்கத்தின் தலைவர் திரு. சனத் மனதுங்க ஆகியோர் ஓர் குழுக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். அவற்றில் கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள் இங்கு சுருக்கமாகத் தரப்படுகின்றன.

### இலங்கையின் பொருளாதார நெருக்கடி

சுதந்திரத்திற்குப் பின்னரான காலத்தில், வரலாறு கண்டிராத அளவு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை இலங்கை 2022இல் சந்திக்க நேரிட்டது. இந்த சிக்கலான காலப் பகுதியில் முக்கிய பேரண்டப்பொருளாதார குறிகாட்டிகள் பாரிய சரிவைச் சந்தித்தன. பணவீக்கம் 70 சதவீத உச்சத்தை எட்டியது. இலங்கை ரூபா சடுதியான ஓர் பெறுமானத் தேய்வைப் பதிவுசெய்தது. வெளிநாட்டு ஒதுக்குகள் வீழ்ச்சியடைந்ததுடன் பொருளாதாரம் 7.3 சதவீத சுருக்கத்தைப் பதிவுசெய்தது.

இந்தப் பொருளாதார நெருக்கடியென்பது 'ஓரிரவுக் காலப்பகுதியில்' ஏற்பட்டதல்ல என்பதனை மிகவும் தெளிவாக கலாநிதி அமரே சகர அவர்கள் சுட்டிக்காட்டினார். பல ஆண்டுகாலமாகக் காணப்பட்ட சிக்கல்களான, அதிகரித்து வந்த பொதுக்கடன், தாழ்வான வரி வருமானம் மற்றும் தவறான பெருளாதாரத் தீர்மானங்களே இதன் பின்னணியில் காணப்பட்டன. இவற்றுடன், 2019ஆம் ஆண்டின் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள், கொவிட் - 19 தொற்றுநோய் மற்றும் வெளிவாரியான அதிர்வுகளும் இந்த சிக்கல்கள் மீது மேலும் அழுத்தத்தைச் செலுத்தி, பொருளாதாரத்தின் நெருக்கடிக்கு வழிவகுத்தன.

### பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்குகள் என்ன?

பன்னாட்டு நாணய நிதியத்துடனான இலங்கையின் நிகழ்ச்சித்திட்டம் ஐந்து முக்கிய குறிக்கோள்களைக் கொண்டுள்ளது:

1. **இறைத்துறை சார்ந்த திருத்தங்கள்:** வரியிலிருந்து பெறக் கூடிய வருமானத்தை அதிகரித்தல், வீண் அரச செலவினங்களை குறைத்தல் மற்றும் இவைக்கு மத்தியில் பாதிக்கப்படக்கூடிய வகுப்பினரினைப் பாதுகாத்தல்.

**2. பொதுப்படுகடனை நிலைப்பேறானதாக மாற்றல்:** மொத்தப் பொதுக்கடனைக் குறைத்தல் மற்றும் மீள்கொடுப்பனவு முகாமைத்துவத்தை மேம்படுத்தல்




**3. விலை உறுதிப்பாட்டை பேணுதல் மற்றும் வெளிநாட்டு ஒதுக்குகளை கட்டியெழுப்புதல்**

**4. நிதியியல் முறைமையைப் பாதுகாத்தல்:** வங்கிகள் திடமானதாகவும் உறுதிப்பாடுடையதாகவும் இருப்பதனை உறுதிசெய்வது.

**5.ஊழலை எதிர்ப்பது மற்றும் வளர்ச்சியைத் தூண்டுவது:** வெளிப்படைத்தன்மைக்கான மற்றும் நீண்டகால அபிவிருத்திக்கான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவது.

### நிபுணர்களின் கலந்துரையாடலிலிருந்த முக்கிய குறிப்புக்கள்

**நீண்டகாலமாகக் காணப்பட்ட தவறான இறை முகாமைத்துவம் மற்றும் சீர்திருத்தங்களின் காலதாமதமான நடைமுறைப்படுத்தல் என்பன பொருளாதார நெருக்கடியின் அடிப்படையாகும்.** பொருளாதார நெருக்கடியின் ஆழத்தை எடுத்துரைத்து அரச இறைத்துறையின் நலிவுத் தன்மையைப் பற்றி கலாநிதி சந்திரநாத் அவர்கள் வினவினார். மிகவும் தாழ்வாகக் காணப்பட்ட அரச வருமானத்தின் பின்னணியில், கடினமானதாக இருந்தாலும் வரிச் சீர்திருத்தங்களின் அவசியத்தை திரு. மஹிந்த சிறிவர்தன அவர்கள் எடுத்துரைத்தார். இதனைத் தொடர்ந்து, இந்நெருக்கடியானது பெருமளவில் உள்நாட்டுக் காரணிகளினால் ஏற்பட்டது என்றும், மக்களை ஈர்க்கும் (populist) கொள்கைகள் மற்றும் நலிவான இறைக் கட்டுப்பாடு என்பதனால் இது மேலும் மோசமடைந்தது என்று கலாநிதி கிருக்ஷ்ணா சிறினிவாசன் அவர்கள் கூறினார். ஆகவே சென்மதி நிலுவை சார்ந்த சிக்கல்கள் மட்டுமின்றி எப்போதும் கண்டிராத ஓர் பொதுக்கடன் சுமையும் இந்த நெருக்கடியின் பின்னணியில் காணப்பட்டது.

**வரவிற்கு மிஞ்சிய செலவினத்தினால் ஏற்பட்ட இரட்டைப் பற்றாக்குறைகள் நாட்டை நெருக்கடிக்குள் இட்டுச்சென்றன.** ஏற்றுமதிகளை ஊக்குவித்து வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டிக்கொண்ட பல ஆசிய நாடுகள் மாதிரியல்லாமல், இலங்கையானது அதிகமான அரச செலவினம் மற்றும் வெளிநாட்டுச் செலாவணியை கவராத பல துறைகளில் அதிக கவனஞ்செலுத்தியது என்று பேராசிரியர் சிறிமல் அபேரத்ன விளக்கினார். காலப் போக்கில், ஏற்றுமதி வளர்ச்சி மெதுவடைந்த அதேவேளையில் பெருமளவில் கடன்பெறுகைகளினால் நிதியிடப்பட்ட அரச செலவினம் தொடர்ந்தது. ஆகவே, இது விடாப்பிடியான வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை மற்றும் வரவு- செலவுத்திட்ட பற்றாக்குறைகளான 'இரட்டைப் பற்றாக்குறைகளை' (twin deficits) விளைவித்தது. திடமான வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் இல்லாததனால் நாடு இந்த மாற்றங்களுக்கு முகங்கொடுக்கமுடியவில்லை என்றும் எதிர்காலத்தில் இவ்வகையான ஓர் சிக்கலை இலங்கை தவிர்ப்பதற்காக குறிப்பாக ஏற்றுமதிகளுக்கு புத்துயிரளிப்பதற்கான சீர்த்திருத்தங்களின் தேவைப்பாட்டினை அவர் வலியுறுத்தினார்.



பூங்கோதை இரத்தினவடிவேல்,
பிரதி பணிப்பாளர்,
தொடர்பாடல் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி

**நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை பேணுதல் நாட்டின் மீட்சிக்கு இன்றியமையாதது.** நெருக்கடிக் காலப்பகுதியில் வங்கித் தொழில் முறைமை செயலிழந்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்ற கலாநிதி சந்திரநாத்தின் அனுமானமுடைய கேள்விக்கு பதிலளித்த திரு. சனத் மனதுங்க அவர்கள் வங்கித்தொழில் நெருக்கடியைத் தவிர்த்தது மிகவும் கடினமானதாகவும் இன்றியமையாததாகவிருந்தது என குறிப்பிட்டார். பாரிய சீர்குலைவைத் தவிர்ப்பதற்கு, இலங்கை மத்திய வங்கி, நிதி அமைச்சு மற்றும் வங்கிகள் மிகவும் விரைவாகவும் ஒருங்கிணைந்த முறையிலும் செயற்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியை திறமையாக முகாமைத்துவஞ் செய்ததனால் எந்தவொரு வங்கியும் முறிவடைய வில்லை என்று அவர் எடுத்துரைத்தார். கணக்காய்வாளர்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்து செயற்பட்டதனால் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் உள்ளடங்கலான பாதிப்படையக்கூடிய வாடிக்கையாளர்களுக்கான நிவாரணத்தை (கடன் மறுசீரமைப்பு, வட்டி நிவாரணம் போன்றவற்றை) வழங்கியபோதிலும் வர்த்தக வங்கிகளின் மூலதனத்தில் ஏதேனும் சிதைவு தவிர்க்கப்பட்டது என்றும் அவர் விளக்கினார். இது தொடர்பில் அவர் முக்கியமாக குறிப்பிட்டது **வங்கித் தொழில்முறை சீர்குலைந்திருந்தால், கிறீஸ், சைப்பிரஸ் மற்றும் ஆர்ஜென்ரீனாவில் காணப்பட்டது போல் பொருளாதார மீட்சிக்கு ஒரு தசாப்த காலம் கூட எடுத்திருக்கலாம்.** அத்துடன் இது பாரிய உள்நாட்டு உற்பத்தி இழப்புக்களுடன் பொருளாதாரம் மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையையும் சிதையச் செய்திருக்கும் என்று அவர் வலியுறுத்தினார். விரைவான ஒருங்கிணைப்பு மற்றும் இழப்புக்களை யாவரும் பகிர்ந்து

(தொடர்ச்சி 10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

படம் : நாளை நமதே (1974)
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
வரிகள் : கண்ணதாசன்



அன்பு மலர்களே நம்பி இருங்களே
நாளை நமதே இந்த நாளும் நமதே
தர்மம் உலகிலே இருக்கும் வரையிலே
நாளை நமதே எந்த நாளும் நமதே

தாய் வழி வந்த தங்கங்கள் எல்லாம்
ஓர் வழி நின்று நேர் வழி சென்றால்
நாளை நமதே...

காலங்கள் என்னும் சோலைகள்
மலர்ந்து காய் கனியாகும்
நமக்கென வளர்ந்து

நாளை நமதே நாளை நமதே நாளை நமதே
நாளை நமதே நாளை நமதே நாளை
நமதே நாளை நமதே

பாசம் என்னும் ஊர் வழி வந்து பாசமலர் கூட்டம்
ஆடும் மழையில் அமைவது தானே வாழ்க்கை
பூந்தோட்டம்

மூன்று தமிழும் ஓர் இடம் நின்று
பாடவேண்டும் காவியச் சிந்து

அந்த நாள் நினைவுகள் எந்த நாளும் மாறாது
அந்த நாள் நினைவுகள் எந்த நாளும் மாறாது

நாளை நமதே, நாளை நமதே

வீடு என்னும் கோயிலில் வைத்த வெள்ளி தீபங்களே
நல்ல குடும்பம் ஒளிமயமாக வெளிச்சம் தாருங்களே

நாடும் வீடும் உங்களை நம்பி நீங்கள்தானே
அண்ணன் தம்பி

எதையுமே தாங்கிடும் இதயம் என்றும் மாறாது

நாளை நமதே நாளை நமதே

தாய் வழி வந்த தங்கங்கள் எல்லாம்
ஓர் வழி நின்று நேர் வழி சென்றால்
நாளை நமதே...

காலங்கள் என்னும் சோலைகள்
மலர்ந்து காய் கனியாகும்
நமக்கென வளர்ந்து

நாளை நமதே நாளை நமதே நாளை நமதே

(9 ஆம் பக்க தொடர்ச்சி...)

கொண்டதனால் மிகவும் மோசமான இந் நிலையை இலங்கை தவிர்த்துக் கொண்டது என்று அவர் குறிப்பிட்டார்.

**அவசரநிலைமை, நியாயத் தன்மை மற்றும் சீர்திருத்தம் என்பவற்றை சமநிலைப்படுத்தியே சர்வதேச நாணய நிதியத்துடனான நிகழ்ச்சித்திட்டம் உருவாக்கப்பட்டது.** நெருக்கடிக்கு மத்தியில் இவற்றை எவ்வாறு சம நிலைப்படுத்தி நிகழ்ச்சித் திட்டம் அமைக்கப்பட்டது என்ற கலாநிதி அமரசேகரவின் கேள்விக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 128 சத வீதமாக காணப்பட்ட பொதுக் கடனைப் பார்க்கையில் அதிகரித்த அரச வருமானத்தினால் இறைத் திரட்சி (fiscal consolidation) முன்னெடுக்கப்பட வேண்டியிருந்தது என்று கலாநிதி சிறினிவாசன் அவர்கள் விளக்கினார். அத்துடன் ஊழலுக்கு எதிரான மற்றும் ஆளுகை தொடர்பான சீர்திருத்தங்கள், முக்கியமாக ஆசியாவிலேயே முதன் முறையாக சர்வதேச நிதியத்தினால் முன்னெடுக்கப்பட்ட ஆளுகை கண்டறிதல் சோதனை (governance diagnostic) இலங்கையில் மேற் கொள்ளப்பட்டது. அத்துடன் **மத்திய வங்கியின் சுயாதீனத்தன்மை மற்றும் அரசின் இறை முகாமைத் துவத்தை மேம்படுத்துவது என் பவை இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் விசேடமாக காணப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார். இந்த நெருக்கடியில் பல மனித நேய கரிசனை களும் இருப்பதனால், முன்னைய சர்வதேச நாணய நிதியத்துடனான நிகழ்ச்சித் திட்டங்களுடன் ஒப்பிடுகை யில் கண்காணிப் பும் இறுக்கமாகக் காணப் படுகிறது.** இலங்கை மத்திய வங்கியின் அலு வலர்கள் பொருளாதாரம் பற்றிய தங்களது கரிசனைகளை 2021 செப்ரெம்பரில் தெரிவித்தபோதிலும் தீர்வினைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் கால தாமதமாக்கப்படுத்தப்பட்டமை நெருக்கடியை மோசமடையச்செய்தது என்று திரு. சிறிவர்தன குறிப்பிட்டார். அத்துடன் உயர்வான பணவீக்கச் சூழலில் வரி அதிகரிப்புக்களின் நடை முறைப் படுத்தல் சிக்கலாகக் காணப் பட்டபோதிலும் இது அவசியமாயிருந்ததென அவர் குறிப்பிட்டார்.

**ஆளுகை மற்றும் சமூகப் பாதுகாப்பு என்பவை தார்மீகக் கடப் பாடுகள் மட்டுமல்ல பேரண்ட பொருளாதார கடப்பாடுகள் ஆகும்.** சர்வதேச நாணய நிதியத்தின் நிகழ்ச்சித் திட்டத்தில் புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட ஆளுகை சீர்திருத்தங்கள் மற்றும் சமூக பாதுகாப்பு வலைகளின் வலுப்படுத்தல் என்பவை இலங்கைக்கு ஏன் அவசியமானது என்ற கேள்வி எழுந்தது. இம்முறையான சட்ட ஒழுங்குமுறைப் படுத்தல் மற்றும் நிறுவனரீதியான கட்டமைப்புக் கள் இல்லாமல் நான்கு தசாப்த காலத்திற்கு மேலாக பொருளாதார தாராளமயப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது. இதனால் மக்களின் நம்பிக்கை நலிவடைந்து சீர்திருத்தம் என்றாலே சமமின்மை மற்றும் ஊழலை விளைவிக்கும் என்ற கருத்து ஏற்பட்டுள்ளது என்றும் திடமற்ற அடித்தளத்தில் ஓர் செயற்றிறனான சந்தை பொருளாதாரத்தை கட்டியெழுப்பமுடியாது என்று பேராசிரியர் அபேரத்ன வலியுறுத்தினார். சமூக பாதுகாப்பு வலைகள் தொடர்பில் அவர் வறுமை என்பது ஓர் தொடர்ச்சியான மற்றும் அபிவிருத்தி சார்ந்த பரிணாமம் என்பதிலிருந்து நெருக் கடியினால் ஏற்பட்ட பாரியளவிலான வறுமையாக மாற்றம் பெற்று நடுத்தரவருமான குடியிருப் புக்களையும் கூட பாதிக்கும் விடயமாக மாறி யுள்ளது என்று அவர் விளக்கினார். அசுவசும [illegible] ஆதரவை [illegible]போதிலும் [illegible] **மாற்றங்கள் ஓர் தற்காலிக நிவாரணத்தை மட்டும் வழங்கும் என்றும் பொருளாதார வளர்ச்சியே வறுமைக் கான உண்மையான தீர்வு** என்றும் அவர் குறிப்பிட்டார்.


**நெருக்கடியின் பாடங்களை நெறிமுறை யாக மாற்றவேண்டும்.** சர்வதேச நாணய நிதியத்து டனான இறுதி நிகழ்ச்சித்திட்டமாக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற வேளையில், இவ்விலக்கை எய்துவதற்கு சீர்திருத்தங்கள் எவ்வகையில் நிறுவனமயமாக்கப்படுகின்றன என்று கலாநிதி அமரசேகர அவர்கள் வினவினார். கிரமமான செயலாற்ற மீளாய்வுகள், டிஜிற்றல் மயப்படுத்தல் மற்றும் திறைசேரியுடனான ஒருங்கிணைப்பு என்பவற்றினூடாக பிரதான அரச வருமான சேகரிப்பாளர்களான உள்நாட்டு இறை வரித் திணைக்களம், இலங்கைச் சுங்கம் மற்றும் இலங்கை மதுவரித் திணைக்களம் என்பவை தற்போது வலுப்படுத்தப்படுகின்றன என்று திரு. சிறிவர்த்தன தெரிவித்தார். அத்துடன் முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகள், இலத்திரனியல் கோப்பு முறைமை மற்றும் சுங்கத் தரவுகளுக்கான தன்னியக்க முறைமை என்பவற்றினூடாக வெளிப்படைத்தன்மை மேம்படுத்தப்படுவதுடன், மனித தலையீடு மற்றும் ஊழலை குறைப்பதற்கும் இவை உதவுகிறது என்று கூறினார். இறை விதிகள் மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை பொறி முறைகளை அறிமுகஞ்செய்யும் அண்மையில் சட்டவாக்கப்பட்ட பொது நிதி முகாமைத்துவச் சட்டம் ஓர் முக்கிய கட்டமைப்புரீதியான சீர்திருத்தமென அவர் குறிப்பிட்டார். இத்துடன், இறைத்துறை மீதான மேற் பார்வையை மத்தியமயமாக்குவதற்கும் நெறி முறைப்படுத்துவதற்கும் ஓர் பொது படுகடன் முகாமைத்துவ அலுவலகமும் நிறுவப்பட்டுள்ளது. இந்த மாற்றங்கள் ஏற்பட்டுள்ளபோதிலும், சீர் திருத்தம் என்பது ஒரே தடவையில் மேற்கொள் ளப்படும் ஓர் விடயமல்லவென்றும் பல கடினமான சீர்திருத்தங்களை முன்னரே நடைமுறைபடுத்தி யதால்,இவற்றை மேலும் வலுப்படுத்தி முன் னோக்கி கொண்டுசெல்லவேண்டும் என்றும் முன்னைய காலங்களில் காணப்பட்ட செழிப்பு-முறிவு (boom-bust) சுழற்சியிலிருந்து வெளி யேறவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

பொருளாதார வீழ்ச்சியிலிருந்து ஓர் திடமான மீட்சியை நோக்கிய இலங்கையின் பயணம் ஒரு எச்சரிக்கைக் கதையாக அமைந்தாலும் இது தீர்க்கமான கொள்கை நடவடிக்கைகளினால் ஏற்படக்கூடிய நேர்கணியமான விளைவுகளின் சான்றையும் பிரதிபலிக்கிறது. சர்வதேச நாணய நிதியத்துடனான முன்னைய நிகழ்ச்சித்திட்டங் களைப் போலல்லாமல், இத் திட்டம் ஆளுகை சீர்திருத்தங்கள், நிறுவனவலுப்படுத்தல் மற்றும் சமூக பாதுகாப்பு மீது அதிக கவனஞ்செலுத்தி ஓர் முழுமையான முறையில் பொருளாதாரத்தை நிலைபேறான முறையில் கட்டியெழுப்பும் நோக்கு டனானதாக அமைந்துள்ளது. இதன் பிரதி பலிப் பாகவே தற்போதைய மீட்சி காணப்படுகின் றது.

இருப்பினும், நெருக்கடியிலிருந்து வெளி யேறினாலும், பொருளாதாரத்தின் இயலாற்றலை வலுப்படுத்தி நிலைபேறான வளர்ச்சிப்பாதையை உருவாக்கவேண்டும். அத்துடன் பகிரப்பட்ட தியாகத் தின் மூலம் உருவாக்கப்பட்ட சமூக ஒப்பந்தம் (social compact) மதிக்கப்பட வேண்டும். பொருளாதாரச் சீராக்கத்தினால் பல தரப்பிலும் ஏற்பட்ட சுமையை சுமக்கும் குடிமக்களுக்கு வெளிப்படைத்தன்மை அவசியமாகும். தற்போது காணப்படும் மீட்சிப் பயணத்திற்கான அடித்தளம் கடந்த இரு ஆண்டுகளாக நாட்டப்பட்டி ருந்தாலும், நிலையான சுபீட்சமானது சீர்திருத்தங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதிலேயே தங்கி யுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவோம்



# ஆன்மிகம்

**வீட்டில் நவக்கிரகப் படங்களை வைத்து பூஜிக்கலாமா?**

நம்பிக்கையும் பக்தியும் இருந்தால் சகல இடங்களிலும் இறை சாந்நித்தியத்தைப் பெற முடியும். ஆகவே, வீட்டிலேயே நவக் கிரகத்தை ஆராதிக்கலாம். நமது நல்லது, கெட்டதை வரையறுப்பதில் கிரகங்கள், நட்சத்திரங்கள், இராசிகளுக்குப் பங்கு உண்டு. காலத்துடன் இணைந்தவை இவை. காலத்தை இயக்கும் இறையின் அருளைப் பெற நவக்கிரக வழிபாடு துணை செய்யும்.

**கருவறை மூடியிருக்க, ஆலய வலம் வர லாமா?**

கருவறை நடை சாத்தப்பட்டாலும் கடவுள் சந்நிதியையும், பிராகாரத்தையும் வலம் வரலாம். கதவுகள் மூடப்பட்டிருந்தாலும் நம் மனம் உள்ளே இருக்கும் தெய்வத்தை நினைவுகூரும். காலை பூஜை முடிந்த பின் கருவறையை மட்டும் சாத்தி விட்டுப் போவார் கள். கோவிலை முழுவதுமாக மூடுவதில்லை. கோவிலின் பிரதான வாயில் திறந்திருக்கும். பொதுமக்கள் வந்து போவதற்காகவே இந்த ஏற்பாடு. இப்படி வலம் வரும்போது நடை சாத்தப்பட்டிருந்தாலும், நம் மனம் முன்பு பார்த்த அந்த தெய்வத்தை நினைவுகூரும். கதவால் மறைக்கப்பட்ட கடவுள், மனக் கண்ணில் தென்படுவார்.

**படுக்கை அறையில் சாமிப் படங்களை மாட்டி வைக்கலாமா?**

தாராளமாக மாட்டி வைக்கலாம். இறைவன் எங்கும் இருப்பவர். உமது அருளால் இன் றைய பொழுது நன்றாக இருந்தது. நாளைய பொழுதையும் நல்லதாகச் செய்து விடுங்கள் என்று இரவில் படுக்கும்போது இறைவனை வணங்குவது மிகவும் சிறப்பு. இறை சிந்தை யுடன் விழிப்பதும், உறங்கச் செல்வதும் விசேடம். ஆகவே, மன நெருடல் தேவை இல்லை.

**நல்ல காரியங்களுக்கு மூன்று பேராகப் போகலாமா?**

வேலையில் முழுக்கவனம் இருப்பவரும், கடமையில் ஈடுபட்டவரும் மூன்றைப் பற்றி நினைக்கவோ கவலைப்படவோ மாட்டார்கள். மனம் திடமாக இருந்தால், மூவர் சேர்ந்து போகலாம். மற்றையபடி மூவராக செல்லக் கூடாது என்பதெல்லாம் ஆதாரமற்ற நம் பிக்கை!

**திருவிளக்கில் மீதமாகும் எண்ணெயை, மீண்டும் விளக்கேற்றப் பயன்படுத்த லாமா?**

தாராளமாகப் பயன்படுத்தலாம். இயற்கை அளித்த பொருட்களை வீணாக்குவது தவறு. இவற்றை உரிய முறையில் பயன்படுத்துவதே சரி. அதேநேரம் எண்ணெயில் அதிகம் கசடு மண்டி, தூய்மை இழந்திருந்தால் மாற்றி விடுவது சிறப்பு.

# ஆச்சி அறிவுரை



# துணிப்பை தூக்கத் துணிவோம்

## பேராண்டி...

மூண்டு நாளா எனக்கு சரியான ஏலாப்பு. மூச்செடுக்க கஷ்ரம். கொப்பா டொக்டருட்டைப் போவமெண்டு ஒரே ஆய்க்கினை.

நான் மாட்டேண்டு போட்டன். அங்க போக முட்டு வருத்தமெண்டு பம்மத் தருவினம். பிறகு அதில்லாமல் வாழ ஏலாமல் போயிடுமெண்டுட்டன்.

நல்ல தேசி இலை, தேயிலைச்சாயம் போட்டு கொதிக்க வைச்சு மூண்டு நாள் ஆவி பிடிச்சன்.

அவ்வளவுதான் நெஞ்சுச்சளி எங்க போனதெண்டே தெரியாது.

அண்டைக்கு முடக்கொத்தான் இலை பிடுங்க வேலிக்கரைக்குப் போன னான். அயல்வீட்டுக்காரர் வேலிக்கரையிலை எதையோ கொழுத்தியிருந் தினம்.

சரியான புகை. மணமும் வித்தியாசம். நான் உடனயே என்ன பிள்ளை கொழுத்திரியள் எண்டு கேட்டன்.

வீட்டிலை கிடந்த பிளாஸ்ரிக் போத்தல்கள், பொலித்தீன் பாக் இடத்தை நிரப்பிக் கொண்டிருந்தது அதைத்தான் மூட்டிவிட்டிருக்கு எண்டாள் பெட்டை.

இதுகளைக் கொழுத்துறது சூழலுக்குக் கேடு. உடனை நூருங்கோ எண்டு சொல்லி, நான் நிண்டு தண்ணி ஊத்தி நூத்துப் போட்டு வந்தனான்.

அந்தப் புகை ஒத்தேல்லை.

அதுதான் மூச்சுத் திணறல் மாதிரி வந்திட்டுது பேராண்டி.

எங்கட ஆக்களுக்கு சூழல் தொடர்பிலை எந்த விழிப்புணர்வும் இல்லை. எதை எரிக்கவேணும் எதை எரிக்கக்கூடாது எண்டுற அடிப்படை தெரியாது.

பிளாஸ்ரிக், பொலித்தீன் புகை மிகப் பயங்கரமானது. அது மரணத்தைக் கூட ஏற்படுத்திவிடும்.

முந்தி வீடுவளிய காவோலை, பன்னாடையிலைதான் அடுப்பு மூட்டுறவை. இப்ப பொலித்தீன் பையைப் போட்டெல்லோ அடுப்பு மூட்டுகினம்.

இதின்ர பாதிப்பு பயங்கரமானது. ஒருநாள் – இரண்டு நாள் எண்டால் பரவாயில்லை. பலநாள் இப்பிடிச் செய்தால் மூச்சுத்திணறல் வருத்தம் வந்தே தீரும்?

பொலித்தீன் பூமிக்குக் கிடைச்ச சாபக்கேடு பேராண்டி. நாங்கள் வேலைச் சுகத்தைப் பார்க்கிறமே தவிர, எங்கட சூழல் நல்லா இருக்கவேணும் எண்டு சிந்திக்கிறதில்லை.

நாங்கள் 5 ரூபாய்க்கு வாங்கிற பொலித்தீன் பை ஐயாயிரம் ஆண்டு மட்டும் மண்ணுக்குள்ள நெக்காமல் நஞ்சாக் கிடக்குமாம்.

முந்தி வாழையிலையிலை சாப்பாடு கட்டினம். என்ன தேவைக்கும் துணிப்பையைக் கொண்டு போவம்.

இப்ப அதுகளை கைவிட்டுட்டு சூழலையும் எங்களையும் அழிக்கிற நஞ்சைக் காவிக் கொண்டு திரியிறம்.

துணிப்பை தூக்கத் துணிவோம். எங்கள் சூழலைக் காப்போம்.

ஆச்சி வருவா...

மாவை.நா.கஜேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்ப்பால் உண்மைகள்



குழந்தை பிறந்து ஓர் ஆண்டு வரை கட்டாயம் தாய்ப்பால் புகட்ட வேண்டும் என்று குழந்தைகள் நல மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றனர்.


குழந்தைக்கு தொடர்ந்து தாய்ப்பால் புகட்டி வருவதன் மூலம், தாய்க்கு சினைப்பை, கர்ப்பப்பை, மார்பகப் புற்றுநோய் மற்றும் இதய நோய்க்கான வாய்ப்பு குறைவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மேலும், சர்க்கரை நோய், உடல்பருமன், மனஅழுத்தம் உள்ளிட்ட பிரச்சினைக்கான வாய்ப்பும் குறைகிறது.

தாய்ப்பால் புகட்டும்போது தாயின் உடலில் ஆக்ஸிடோசின் என்ற ஹார்மோன் சுரக்கிறது. இதை அன்பு ஹார்மோன் என்றும் சொல்வார்கள். தாய்க்கும் குழந்தைக்கும் இடையில் அன்பு மேலும் நெருக்கம் அடையவும், தாயின் மன அழுத்தத்தைப் போக்கவும் உதவுகிறது. இது அமைதியான மனநிலையை தாய்க்கு அளிக்கிறது. தாய்ப்பாலில் வாழ்வளிக்கும் ஊட்டப் பொருட்கள் உள்ளன. ஆன்டிபாடீஸ், வெள்ளை அணுக்கள் மற்றும் செரிமானத்துக்கான என்சைம்கள் என பல முக்கியப் பொருட்கள் உள்ளன. இது குழந்தையின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்வதுடன், செரிமான மண்டலத்தை மேம்படுத்துகிறது.

தாய்ப்பால் புகட்டுவதன் மூலம் ஒரு நாளைக்கு அண்ணளவாக 300 முதல் 500 கலோரிகள் வரை எரிக்கப்படுகிறது. தாய்க்கு உடல் எடை குறைக்க பெரிதும் உதவியாக இருக்கிறது. தாய்ப்பாலில் 300இற்கும் மேற்பட்ட மூலக்கூறுகள் இருக்கின்றன.

குழந்தைக்கு தாய்ப்பால் புகட்டுவது, சுவாசப்பாதை நோய்த்தொற்று, காது நோய்த்தொற்று, சிறுநீர்ப்பாதை நோய்த்தொற்று, வயிற்றுப்போக்கு போன்ற பிரச்சினைகள் வராமல் தடுக்கிறது. எதிர் காலத்தில், டைப் 1, டைப் 2 சர்க்கரை நோய், உடற்பருமன், உயர் ரத்த அழுத்தம், இரத்தத்தில் கொழுப்பு அளவு அதிகரிப்பு, ஆஸ்துமா, புற்றுநோய்க்கான வாய்ப்பைக் குறைக்கிறது.

# அடுக்களைப் பக்கம்



- சாப்பிடுவதற்கு முன் சூப் அருந்துவது நல்லதுதான். ஆனால், குறைந்தபட்சம் அரைமணி நேரத்துக்கு முன்பாக அருந்த வேண்டும்.

- மிளகு, சீரகம் போன்ற பொருட்கள் சேர்க்கப்படுவதால் சூப் செரிமானத்தை எளிதாக்கும். காய்கறிகள் சேர்த்துச் செய்யப்படும் சூப்களில் நார்ச்சத்து மிகுந்திருக்கும். உடலில் உள்ள கெட்ட கொழுப்பும் குறையும். சூப் அருந்திவிட்டு சாப்பிடும்போது வழக்கத்தைவிடக் குறைவாகச் சாப்பிடுவோம். உடல் எடையைக் குறைக்க விரும்புபவர்கள் சாப்பிடுவதற்கு முன்பு சூப் அருந்தலாம்.

- சிலர் ஒரு வாய் சாப்பிடுவார்கள். உடனே இரண்டு மடக்கு தண்ணீர் குடிப்பார்கள். சாப்பிடும்போது ஊர்க்கதையெல்லாம் பேசுவார்கள். இவை இரண்டுமே தவறு. சாப்பிடுவதற்கு முன்னர் தண்ணீர் அருந்தக்கூடாது. அதேபோல, சாப்பிட்டு அரைமணி நேரம் வரை தண்ணீர் அருந்தக்கூடாது. விக்கல், அடைப்பு போன்று உணவை விழுங்குவதில் சிக்கல் இருந்தால் மட்டும் கொஞ்சம் தண்ணீர் குடிக்கலாம். சாப்பிடும்போது தண்ணீர் குடித்தால், வயிற்றில் உணவைச் செரிக்க உதவும் ஹைட்ரோகுளோரிக் அமிலம் நீர்த்துப் போய்விடும்.

- உடல் பருமனுக்குப் பயந்து சிலர் நெய்யைத் தவிர்க்கிறார்கள். ஆனால், தினமும் சிறிதளவு நெய்யை உணவில் சேர்த்துக்கொண்டால் கண்பார்வை மேம்படும். நோய் எதிர்ப்புச்சக்தி அதிகரிக்கும். உடலில் ஏற்படும் வீக்கங்களை நெய்யில் உள்ள புயூட்ரிக் ஆசிட் (Butyric Acid) குறைக்கிறது. குழந்தைகளுக்கு நெய் மிகவும் அவசியம். மூளை வளர்ச்சிக்கு உதவும். அதற்காக அனைத்து உணவுகளையும் நெய்யில் சமைத்துக் கொடுக்கக்கூடாது.



# விற்றமின் – சி



சோர்வாக இருக்கும்போது ஒரு கிளாஸ் லெமன் அல்லது ஆரஞ்சு ஜூஸ் குடித்துப் பாருங்களேன். உடலுக்கு எனர்ஜியும் புத்துணர்ச்சியும் உடனடியாகக் கிடைக்கும். இதற்குக் காரணம் விற்றமின் சி. நமக்கு அன்றாடம் தேவைப்படக்கூடிய மிக முக்கியமான விற்றமின் இது. தாவரங்களிலும் விலங்குகளிலும் இருக்கும் இந்த விற்றமின் நீரில் கரையக்கூடிய நுண் ஊட்டச்சத்து என்பதால், உடலால் தேக்கி வைக்க முடியாது. எனவே, தினமும் விற்றமின் சி நிறைந்த உணவுகளை எடுத்துக்கொள்வது அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் ~ மிகச்சிறிய ~ பாம்பு



உலகின் மிகச்சிறிய பாம்பாக அறியப்படும் பார்படோஸ் த்ரெட் பாம்பை கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு ஆய்வுக் குழு கண்டுபிடித்துள்ளது.

இந்தப் பாம்பு இழை போன்ற மெல்லியதாக இருக்குமாம், அது முழு வளர்ச்சி அடையும் போது 10 சென்றி மீற்றர் நீளமே இருக்குமாம்.


இந்த வகையான பாம்பு அழிந்துவிட்டதாக நிபுணர்கள் எண்ணிய நிலையில் பார்படோஸ் சுற்றுச்சூழல் அமைச்சகம் மற்றும் ரீ:வைல்டு (Re:wild) பாதுகாப்பு அமைப்பு இணைந்து நடத்திய சூழலியல் ஆய்வின் போது, மத்திய பார்படோஸில் ஒரு பாறையின் கீழ் இந்த பாம்பை கண்டறிந்துள்ளனர்.

2000களின் தொடக்கத்திலிருந்து இந்தப் பாம்பு அதிகாரப்பூர்வமாக பதிவு செய்யப்படவில்லை என கூறப்படுகிறது. இது உலகளவில் "அறிவியலுக்கு இழந்த" இனங்களில் ஒன்றாக பட்டியலிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தான் பார்படோஸ் த்ரெட் பாம்பை சூழலியல் ஆய்வின் போது கண்டுபிடித்துள்ளனர்.

1889ஆம் ஆண்டு முதல் பதிவு செய்யப்பட்ட இந்த த்ரெட் பாம்பு பாலியல் இனப்பெருக்கம் செய்யும் தன்மை கொண்டது. பெண் பாம்புகள் ஒருமுறை ஒரு முட்டை மட்டுமே இடுகின்றன. இது ஊர்வன உலகில் அரிதானது என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்கு பின் உலகின் மிகச்சிறிய பாம்பு வகையை கண்டுபிடித்தது சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மத்தியில் ஒரு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.



# உங்கள் கையெழுத்துக்கு எதிர்காலத்தை மாற்றும் சக்தி உண்டா?



அதேநேரம், ஒருவர் வெறும் கிறுக்கல்களாக இல்லாமல், தனது கையெழுத்தையே அடிக்கடி போட்டுப்பார்த்துக்கொண்டிருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவர், ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் வெற்றியைச் சந்திப்பது நிச்சயம் என்கிறார்கள், கையெழுத்து குறித்த ஆராய்ச்சியாளர்கள்.

கையெழுத்து பற்றிய ஆராய்ச்சியை ஆங்கிலத்தில் கிராஃபாலஜி என்று அழைக்கிறார்கள். இந்த கிராஃபாலஜி, "மூளையின் செயற்பாடுகளே உடலின் அவயவங்களை இயக்குகின்றன. ஆக, உடல் உறுப்புகளின் செயல்களைக் கணிப்பதன் மூலம் நம் சிந்தனைகள் எப்படியானவை, அவற்றின் விளைவால் எதிர்காலம் எப்படி அமையும் என யூகிக்க முடியும்" என்கிறது.

அதேபோல், ஒருவர் கையெழுத்து இடுவதை வைத்தே அவரது குணநலன்களையும் செயற்பாடுகளையும் அவற்றால் எழும் விளைவுகளையும் சொல்லிவிட முடியும் என்பதும் நம்பிக்கை.

ஒருவரது சிந்தனையையும் அதன் விளைவான செயற்பாடுகளையும் கையொப்பம் பிரதிபலிக்கும். தக்க முறையில் கையெழுத்து இடப் பழகுவதன் மூலம், நமது மூளையும் நலம்படச் சிந்திக்கப் பழகும் அதன் விளைவு நமக்கு நலமாக அமையும் என்கிறது கிராஃபாலஜி. இப்படியான நம் கையெழுத்து குறித்த நம்பிக்கை விளக்கங்கள் சிலவற்றைத் தெரிந்துகொள்வோமா? நமது கையெழுத்து கோழிக்கிறுக்கலாக இல்லாமல், தெளிவாக இருப்பது அவசியம். கிறுக்கலான கையெழுத்துக்கு உரியவரது வாழ்க்கை குழப்பமாகவே இருக்கும்.

கையொப்பம் ஆரம்பமாகும் இடத்திலிருந்து 45 டிகிரி கோணத்தில் மேல்நோக்கி சென்று முடியவேண்டும். இப்படியான கையெழுத்துக்குச் சொந்தக்காரர்கள், வாழ்வில் உயரத்தை எட்டுவதில் தடைகள் இருக்காது.

ஒரே நேர்க்கோட்டில் இருப்பதாக அமையும் கையெழுத்தைக் கொண்டவர்களுக்கு வாழ்வில் இன்ப - துன்பங்கள் சமமாக அமையும். கையொப்பம் முடியும்போது கீழ்நோக்கிச் சறுக்கலாக அமைவதாக இருக்கக்கூடாது.

கையொப்பம் போட்டுவிட்டு இறுதியாக முற்றுப் புள்ளி வைப்பது கூடாது. அதேபோன்று, கையொப்பத்தின் கீழ் அடிக்கோடு இடுவதையும் தவிர்க்க வேண்டுமாம். பெயரின் கடைசி எழுத்தை கீழ் நோக்கி நீட்டி கையொப்பத்தை நிறைவு செய்வதும் கூடாது. கீழ்நோக்கி முடியும் எழுத்தாக இருந்தாலும், அதன் அடிமுனையை சற்றே மேல்நோக்கி நீட்டி முடிப்பது நலம்.

மேற்சொன்ன விடயங்களை கவனத்தில் கொண்டு தினமும் கையொப்பம் போட்டுப் பழகலாம். உங்கள் கையெழுத்தை ஆட்டோகிராஃபாக மாற்றும் முயற்சியில்தான் உங்கள் வாழ்க்கையின் வெற்றி அமையும் என்கிறார்கள், கையெழுத்துப் பலனைச் சொல்லும் ஆர்வலர்கள்!

**நீங்களோ, உங்கள் பிள்ளைகள், பெற்றோர் அல்லது நண்பர்களோ எப்போதும் பேனாவால் காகிதத்தில் வெறுமனே கிறுக்கிக்கொண்டே இருக்கும் பழக்கம் இருக்கிறதா? எனில், சம்பந்தப்பட்டவர் குழப்பத்தில் இருக்கிறார் என்று அர்த்தமாம்.**

# தெளிவே என் சிந்தனையுள்... 21

கோடீஸ்வரராய் வாழ்வது என்பது எது என்று தெரியாமல் "கோடீஸ்வரர்" கனவில் ஊன், உறக்கம் மறந்து உழைத்துக் கொண்டிருக்கிறான் மனிதன்.

பணம் மட்டும்தான் கோடீஸ்வரர் என்ற அந்தஸ்தைத் தருமோ என்ற கேள்வி ஏன் எம் மக்களின் மத்தியில் எழவில்லை.

ஏழை வீடு. குடும்பத்தலைவன் தினக்கூலி. அன்று அவன் உழைப்பே அவன் வீட்டின் அடுப் பெரியக் காரணம். வீட்டின் மேற்கூரை முழுவதுமாய் கறையான் அரித்துவிட்டது.

இம்முறை மழைக்கு முன்னர் கூரை சீர் செய்யப்பட வேண்டும்.

இத்தனைக்கும் நடுவில் இரவு அனைவரும் ஒன்றாய் உணவு உண்டுவிட்டு படுத்திருக்கிறார்கள்.

பௌர்ணமி நிலவின் ஒளி, கூரை ஓட்டை இடுக்கினால் பகலாய் மின்னுகிறது வீடு.

பௌர்ணமி அழகை அந்தக் குடும்பம் ரசித்தபடியே மகிழ்வாய் உறங்குகிறது.

ஆனால் நாம் கோடீஸ்வரர் என்று கூறுபவர்கள், பாற்சோறு உண்டுவிட்டு பஞ்சணையில் படுத்திருப்பர். தூக்கம் அவர்களை ஆட்கொள்ளாது.

**அன்பானவர்களே!**

இப்போது சொல்லுங்கள், இவ் இருவரில் உண்மையான கோடீஸ்வரர் யார் என்று?

எந்தக் குடும்பத்தில் மகிழ்வு இருக்கிறதோ, அங்கே நிறைவு இருக்கும். அந்த நிறைவே கோடீஸ்வரர் என்ற பெருமையைத் தரவல்லது.



குருஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகம் 10; நயன்தாரா

**1.** ஆங்கில இலக்கியத்தில் பட்டப்படிப்பு முடித்த கையோடு சி.ஏ படிக்க நினைத்தவர். தொலைக்காட்சியில் நிகழ்ச்சி தொகுப்பாளராக பவனி வந்து, மலையாளத்தில் அறிமுகமாகி பின்பு சினிமா, சினிமா, சினிமாதான்!

**2.** ஐந்து மொழிகளில் கிட்டத்தட்ட 75 படங்களில் நடித்திருக்கிறார். ரஜினி, விஜய், அஜித், சிவகார்த்திகேயன், விக்ரம், சிம்பு, தனுஷ், ஆர்யா, ஜெயம் ரவி என முன்னணி ஹீரோக்களுடன் நடித்த இன்றைய கதாநாயகி இவர்தான். டோலிவுட்டில் வெங்கடேஷ், நாகார்ஜுனா, ரவி தேஜா, பாலகிருஷ்ணாவுடனும் பாலிவுட்டில் ஷாருக்கானோடும் நடித்திருக்கிறார். மம்மூட்டி, மோகன்லால் இணையும் படத்தில் இவரும் இருக்கிறார். ஏனோ கமலுடன் நடிக்க நேரம் கூடிவரவில்லை.

**3.** காதல் கணவர் விக்னேஷ் சிவன், குழந்தைகள் "உயிர், உலக்"கோடு அவரது அழகிய தருணங்கள் நிறைந்திருக்கிறது. குழந்தைகளின் சின்னச்சின்ன குறும்புகளை, மழலைப் பேச்சுக்களை நேரம் கிடைக்கும்போதெல்லாம் பதிவு செய்கிறார். தன் குழந்தைகள் சம்பந்தப்பட்ட பொருட்களைப் பொக்கிஷமாகச் சேர்த்து வைத்திருக்கிறார்.

**4.** தெலுங்கில் 2011இல் நயன்தாரா சீதையாக வேடமேற்ற "ஸ்ரீராமராஜ்யம்" பெரும் வெற்றி பெற்றது. தெலுங்கு தேசம் முழுவதும் சீதையின் மறுவடிவமாகவே பார்த்தது. இன்றைக்கும் அவருக்கான மைல்கல் நிகழ்வு!

**5.** இன்ஸ்டாகிராம் தவிர எந்தத் தளங்களிலும் நயன் இல்லை. பழனி முருகன் கோயிலில் மகன்கள் இருவரும் தரையில் விழுந்து வணங்குவதை கண்கள் மின்ன அருகில் இருந்து விக்னேஷ் சிவன், நயன்தாரா ரசிக்கும் புகைப்படம் இன்றுவரை வைரல்.

**6.** இயக்குநர் சத்யன் அந்திக்காட்டின் "மனசிக்கரே"வில் அறிமுகமானவர். "ஐயா"வில் "ஒரு வார்த்தை கேட்க ஒரு வருஷம் காத்திருந்தேன்" எனப்பாடி தமிழர்களின் மனதிற்குள் வந்தார். 2019 நயனுக்கு சாதனை வருடம். அவரின் விஸ்வாசம், ஐரா, Mr.லோக்கல், பிகில், கொலையுதிர் காலம், லவ் ஆக்ஷன் டிராமா (மலையாளம்), சைரா (தெலுங்கு) வெளியானது.

**7.** விருச்சிக இராசிக்காரர். மன உறுதிக்குப் பேர் போனவர். விமான நிலையங்களில் ரசிகர்கள் ஆர்வத்தோடு சந்தித்தால் ஆதுரமான புன்னகையோடு செல்பி எடுத்துக்கொள்ள அனுமதிப்பார். குழந்தைகளை கன்னத்தோடு கன்னம் ஒட்டி மகிழ்ச்சிப்படுத்திவிட்டுதான் அந்த இடத்தைக் கடப்பார்!

**8.** செம்பருத்தி டீ ரொம்பவும் பிடிக்கும். நெய் சாதம், சிக்கன் இஷ்ட உணவு. பரோட்டாவோடு கலக்கி சேர்த்து சாப்பிடுவது ரொம்பவும் இஷ்டம்!

**9.** நேரம் கிடைத்தால் குடும்பத்தோடு வெளிநாடு பறந்துவிடுவார். கிரீஸ், டுபாய், ஸ்பெயின் மிகவும் பிடித்த இடங்கள்.

**10.** சட்டென வரும் கோபம் பட்டென மறையும் வேகம் என்றிருந்த நயன், உயிர், உலக் வருகைக்குப் பிறகு கனிவாய் மாறியிருக்கிறார். நீண்ட வருடங்களாக தன்னுடன் இருக்கும் பணியாளர்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுத்திருக்கிறார்.



# சி னி மா



அடுத்த படத்திற்கு ரெடியாகி விட்டார் மணிரத்னம். கொடைக்கானலில் குடும்பத்துடன் விடுமுறையைக் கழித்தவர், இப்போது ஸ்கிரிப்ட் வேலைகளில் இறங்கியிருக்கிறார். அநேகமாக புதுமுகங்கள் நடிக்கும் படமாக இருக்கலாம் என்று சொல்கிறார்கள் அல்லது சென்ற தடவை சூழலினால் நடிக்காமல் போய்விட்ட துல்கர் நடிக்கும் படமாக இருக்கலாம் என்றும் கூறுகிறார்கள்.



சமீபத்தில் பட விழா ஒன்றில் பேசிய விஷால், "தற்போது தமிழ் சினிமாவில் ஒரே நாளில் பத்துப் படங்கள் வெளியாகின்றன. எந்தப் படத்திற்கும் சரியான அளவில் தியேட்டர் கிடைப்பதில்லை. அதனால், ரிலீஸை ஒழுங்குமுறைப்படுத்த வேண்டும்" என்று தயாரிப்பாளர் சங்கத்துக்குக் கோரிக்கை வைத்திருக்கிறார்.



லோகேஷ் கனகராஜ், "கூலி"யை முடித்துவிட்டு, கார்த்தியின் "கைதி 2"க்கு வருகிறார். அதைப் போல, விஜயின் "ஜனநாயகன்" படத்தை முடித்துவிட்டு, தனுஷை இயக்க வருகிறார், ஹெச்.வினோத். தனுஷ் இப்போது, "போர்த் தொழில்" இயக்குநரின் படத்தில் நடித்துவருகிறார்.



சுதா கொங் கரா, சிவகார்த்திகேயன் கூட்டணியில் உருவாகிவரும் "பராசக்தி"யின் படப்பிடிப்பு, பொள்ளாச்சியில் மும்முரமாக நடந்துவருகிறது. ஏற்கெனவே, ரவி மோகன், அதர்வா, ஸ்ரீலீலா ஆகியோர் நடித்துவரும் நிலையில், "பாகுபலி" ராணாவும் இணைந்துள்ளார். "தெலுங்கிலும் வசூலைக் குவிக்கத் திட்டமிட்டே ராணா, ஸ்ரீலீலா என டோலிவுட் டாப் நட்சத்திரங்களைச் சேர்த்துள்ளனர்" என்கிறார்கள்.



திருமணத்துக்குப் பிறகும் தொடர்ந்து நடிப்பேன் என அறிவித்திருக்கிறார் சாய் தன்ஷிகா. இப்போதிலிருந்தே விஷாலைக் கவனித்துக்கொள்வது, ரெகுலர் உடற்பயிற்சியைத் தொடர்வதில் விஷாலுக்கு உதவி செய்வது என பிசியாகிவிட்டார். திருமணத்துக்கான ஏற்பாடுகளும் நடக்கின்றன. நடிகர் சங்க புதுக் கட்டடப் பணிகள் நடக்கின்றன. அது முடிந்த கையோடு அங்கேதான் திருமணமாம். வரவேற்பு, நட்சத்திர ஹோட்டலில்!



"வதந்தி 2" வெப்சீரிஸில் நடித்துவரும் சசிகுமார், கைவசமிருக்கும் படங்களை முடித்துவிட்டு, டைரக்ஷனில் கவனம் செலுத்த உள்ளார். பிரமாண்டமான ஒரு வரலாற்றுப் படம் இயக்கும் வேலைகளில் இறங்கியிருக்கிறார். நட்பு வட்டாரங்களில் பலரிடமும் அவர்களிடம் கேட்டு, வரலாற்று நூல்களைத் தேடிப் படித்து வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலைவனத்தில் மணல் இல்லை



சவுதி அரேபியா அதன் பரந்த பாலைவனங்களுக்கு பெயர் பெற்ற நாடாக இருந்தாலும் அவுஸ்திரேலியா, சீனா மற்றும் பெல்ஜியம் போன்ற நாடுகளில் இருந்து மணலை இறக்குமதி செய்கிறது.

### பாலைவன மணல் ஏன் பொருந்தாது?

சவுதி அரேபியாவின் பாலைவனங்களில் மணல் ஏராளமாக இருந்தாலும், அது கட்டுமானத்திற்கு ஏற்றதல்ல. பாலைவன மணல், காற்றால் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அரிக்கப்பட்டு, மென்மையாக இருப்பதால், கான்கிரீட் தயாரிப்புக்கு இது பொருத்தமானதாக இல்லை.

### அவுஸ்திரேலியாவின் பங்கு


2023 இல், அவுஸ்திரேலியா 273 மில்லியன் டொலர் மதிப்புள்ள மணலை ஏற்றுமதி செய்து, உலகின் இரண்டாவது பெரிய மணல் ஏற்றுமதியாளராக இருந்தது.

### வளைகுடா நாடுகளின் நிலை

சவுதி அரேபியா மட்டுமல்ல, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் கட்டார் போன்ற வளைகுடா நாடுகளும் மணலை இறக்குமதி செய்கின்றன.

டுபாய் மற்றும் அபுதாபியின் கட்டுமான விரிவாக்கத்திற்கு தரமான மணல் தேவைப்படுகிறது. மணல் இறக்குமதி என்பது சவுதி மட்டுமல்ல, உலகளாவிய பிரச்சினையாக உள்ளது. மணல் தேவைக்காக **M-sand** மற்றும் மாற்று பொருட்கள் குறித்த ஆராய்ச்சி நடைபெறுகிறது. பாலைவன நாடு மணலை இறக்குமதி செய்வது விசித்திரமாகத் தோன்றினாலும், இது கட்டுமானத் தரம், உலகளாவிய வர்த்தகத்தின் நிலையை வெளிப்படுத்துகிறது.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

456

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## நீரிழிவு நிலையில் பாதங்களை பராமரிப்பது எப்படி?

இன்றைய காலகட்டத்தில் பலருக்கு நீரிழிவின் தாக்கம் அதிகரித்து வருகிறது. குறிப்பாக எமது பிரதேசத்தில், பல இளைஞர் யுவதிகளும் இந்த நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள் ளனர்.

இதற்கு மிக முக்கியமான காரணம்,எமது வாழ்க்கை நடைமுறையில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் ஆகும். ஒருவருக்கு நீரிழிவு நோய் ஏற்படும் போது, அதனால் பல்வேறு நீண்டகால பாதிப்புகள் ஏற்படுகின்றன. இது, பெரிய குருதிக் குழாய்களில் ஏற்படும் பிரச்சனைகள் மற்றும் சிறிய குருதி குழாய்களில் ஏற்படும் பிரச்சினைகள் என இரண்டு வகைப்படும்.

பெரிய குருதிக் குழாய்களில் ஏற்படும் பிரச்சினைகளாக மாரடைப்பு, பாரிசவாதம் என்பவற்றைக் குறிப்பிடலாம். அதேபோல், சிறிய குருதிக் குழாய்களில் ஏற்படும் பிரச்சினைகளாக கண் களில் ஏற்படும் பாதிப்புகள் (கண் குருடாதல்), சிறுநீரகப் பாதிப்புகள் மற்றும் நரம்பு பாதிப்புகள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இது தவிர, நீரிழிவில் ஏற்படும் மிக முக்கியமான பாதிப்புகளில் ஒன்றாக காணப்படுவது பாதங்களில் ஏற்படும் பாதிப்பாகும். இதன் மூலம் அவயவங்களை இழக்க வேண்டிய நிலையும் ஏற்படலாம். எனவே, நீரிழிவு நோயாளர்கள் பாதப்பராமரிப்பு செய்ய வேண்டியது அவசியமாகும்.

எமது சமூகத்தில், நோயாளர்களிடையே இந்த பாதப்பராமரிப்பில் அக்கறை மிகவும் குறைவாக இருக்கிறது. உலகின் ஏதோ ஒரு மூலையில், 20 செக்கன்களுக்கு ஒருவர் தன்னுடைய கால்களை இழப்பதாகத் தரவுகள் குறிப்பிடுகின்றன.

கட்டுப்பாடற்ற நீரிழிவு நோயினாலே இந்த நிலை ஏற்படுகின் றது. நீரிழிவு நோயாளர்கள் தமது கால்களை இழக்கும் நிலைக்கு மிக முக்கியமான காரணமாகக் காணப்படுவது, கால்களில் ஏற்படுகின்ற ஆறாத புண்கள் ஆகும். மிகச்சிறிய புண்களாக ஆரம்பித்து, அதனைக் கவனிக்காதவிடத்து கால்களை இழக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.





இவ்வாறு பாதங்கள் அல்லது கால்கள் இழப்பதைத் தடுக்க என்ன செய்ய வேண்டும் என்று பார்த்தால், மிக முக்கியமாக நீரிழிவு நோயாளர் ஒருவர் தமது குருதியில் காணப்படும் குளுக்கோஸின் அளவை மிகவும் கவனமாகக், கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டியது அவசியம். இதற்கு, கட்டுப்பாடான வாழ்க்கை நடைமுறை அவசியமாகும். ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்வதோடு, உடற் பயிற்சியிலும் ஈடுபட வேண்டும். அதோடு, வைத்தியர்களின் ஆலோசனைப்படி, கிரமமாக மருந்துகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

நீரிழிவு நோயாளர்களுக்கு, நரம்புத் தொகுதியில் பாதிப்பு ஏற்படுவதால், அவர்களுக்கு உணர் ச்சி குறைவாக காணப்படும். அவர்களுக்குப் பாதங்களில் உணர்ச்சி குறைவாக இருப்பதால், பாதங்களில் கற்கள் குத்தும் போது கூட உணர்ச்சி இல்லாமல் இருக்கும். ஆகவே, இவ்வாறான நிலையில் கால்களில் சிறிய புண்கள் ஏற்பட்டு, அதனை கவனிக்காமல் விட, அது பெரிய புண்ணாக மாறி, இறுதியில் கால்களை இழக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

அதேபோல், நீரிழிவு நோயாளர்களுக்கு காணப்படும் அடுத்த முக்கியமான பிரச்சினையாக, குருதி ஓட்டத்தில் ஏற்படும் பிரச்சினைகள் காணப்படுகின்றன. அதாவது, கால்களுக்குச் செல்லும் குருதி ஓட்டத்தில் காணப்படும் பிரச்சினை காரணமாக பல பாதிப்புகள் ஏற்படுகின்றன. அதேபோல், அவர்களுக்கு, Autonomic Nervous System எனப்படுகின்ற நரம்புத் தொகுதியில் பாதிப்பு ஏற்படுவதால், அவர்களுடைய கால்களிலிருந்து வியர்வை வெளியேறுவது குறைவாக காணப்படுகின்றது. அதோடு, கால்களில் Fungus infection என்ற தொற்றுக்கள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளும் அதிகமாக காணப்படுகின்றன. ஆகவே, நீரிழிவு நோயாளிகள் தமது கால்களில் சிறிய புண்கள் காணப்படும் போதே, வைத்திய ஆலோசனையைப் பெறுவது அவசியம். சில சந்தர்ப்பங்களில், அபாயகரமான பிரச்சினைகளும் ஏற்படலாம்.

நீரிழிவு நோயாளர்களுக்கு, கால்களில் புண்கள் ஏற்பட்டு அதனூடாக சீல் வெளியேறினால் அல்லது அவருக்கு காய்ச்சல் ஏற்பட்டால், கால்கள் சிவப்பு நிறமாக இருந்தால், வீக்கம் ஏற்பட்டால் அல்லது அதிகரித்த நோய் நிலைமை காணப்பட்டால், உடனடியாக வைத்திய ஆலோசனையைப் பெற வேண்டியது அவசியமாகும்.

நீரிழிவு நோயாளிகள் குறைந்தது, ஒரு வருடத்திற்கு ஒரு தடவையாவது பாத பரிசோதனைகளை மேற்கொள்வது அவசியமாகும். ஏனெனில், வைத்திய பரிசோதனைகள் மூலம், நீரிழிவு நோயாளி ஒருவரின் பாதம் எவ்வாறு இருக்கிறது என்பதை அறிந்து, அதற்கு ஏற்ற வகையில் சிகிச்சைகளை செய்து கொள்ள முடியும்.

இவ்வாறு வருடத்திற்கு ஒரு முறை செய்யப்படும் பரிசோதனையை Annual Screening என்று அழைப்பார்கள். இதன் மூலம் நீரிழிவு நோயாளிகளின் பாதங்களை Low risk, intermediate risk மற்றும் High risk என்று வகைப்படுத்தக் கூடியதாக இருக்கும். மிகக்கூடிய அபாய நிலையான High risk இருக்கும் போது, அவ்வாறான நோயாளர்களை மூன்று மாதங்களுக்கு ஒருமுறை, அவர்களுடைய பாதங்களை பரிசோதித்துக் கொள்ள வேண்டியது அவசியம். பாதப் பராமரிப்பிற்கு, மேற்கூறியது போல நீரிழிவு நோயினைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும்.

(தொடரும்...)

Dr.M.அரவிந்தன்
அகஞ் சுரக்கும் தொகுதி
சிறப்பு மருத்துவ நிபுணர்.
யாழ்.போதனா
வைத்தியசாலை.

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

மண்டைதீவு 1 ஆம் வட்டாரத்தில் தோட்டக்காணியும் (30 தென்னங் கன்றுகளுடன்) வீட்டுக்காணியும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
**076 260 0788**

## காணி விற்பனைக்கு

சுன்னாகம், புன்னாலைக்கட்டுவன் வீதியில் கதிரமலை சிவன் கோவிலுக்கு அருகாமையில் உள்ள 4 பரப்பு காணி விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு:
**077 504 5783**

(சி-3566)

## லங்கா மஹால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(1379)

UK-1350, Australia-2050, Canada-2550, India-1490, Germany-1990, Italy-2250, Swiss-2480, France-2180

Western Union WU MoneyGram Ria Money Transfer

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,

தொடர்புகளுக்கு
**077 839 3974, 076 889 1308**


# கண்ணீர் அஞ்சலி

எமது ஆருயிர் நண்பன்

அமரர்

## இராமதிலகம் உமேஷ்திரன்

(மானிப்பாய் இந்துக்கல்லூரி – 1994 O/L, 1997 A/L)



**தோற்றம்**
16.09.1978
(மானிப்பாய் யாழ்ப்பாணம்)

**மறைவு**
26.07.2025
(சிட்னி அவுஸ்திரேலியா)

நட்பின் நினைவுச் சுமைகளையும் அன்பின்
அழியாச் சுவடுகளையும் பிரிவின் தீராத
துயரக் கொடுமையையும் தந்து விட்டுச் சென்ற
கெழுதகை நண்பா உனக்கு
எங்கள் விழிநீர்க் காணிக்கை
பேராலமரமொன்றின் விழுதின் வேர் பட்டது
போல் இன்று மானி இந்து அன்னையின்
தங்கமகன் எங்கள் கண் பொங்கி அழ வைத்து
விண்தங்கச் சென்றான்
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி
கண்ணின் மணி போலக் கண்களுக்குள் உறவாடிய
கண்ணியன் கண்களுக்குள் தீ வைத்து விட்டு
விண்புகுந்தான் கண் நிறைந்த நண்பனுக்குக்
கண்ணீர்க் காணிக்கை

(4948)

**பிரிவால் துயருறும்: நண்பர்கள்**

# இராசிபலன்

03.08.2025
ஆடி 18 , ஞாயிற்றுக்கிழமை
நவமி முற்பகல் 9.31 மணிவரை

விசாகம் காலை 7.13 மணிவரை
சுப நேரம் 9.04-10.34 மணிவரை
இராகுகாலம் 4.31-6.04 மணிவரை

ஆடிப்பெருக்கு
சந்திராஷ்டமம்: பரணி

**வளவன்**

**மேஷம்**
ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, பிரயாண பயமுண்டு.

**கடகம்**
புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பெற்றோர் மீதான பாசம் கூடும், வீண் பழிகள் அகலும்.

**துலாம்**
வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உங்களின் பொறுமைக்கு சன்மானம் கிடைக்கும்.

**மகரம்**
பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், மறக்க முடியாத இனிய சம்பவங்கள் இடம்பெறலாம்.

**ரிஷபம்**
ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**சிம்மம்**
பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**விருச்சிகம்**
குடும்பத்தினர் உங்களின் குணமறிந்து நடந்து கொள்வர், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

**கும்பம்**
பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், தொழில் நலன் கருதி தீட்டிய திட்டங்கள் கைகூடும், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.

**மிதுனம்**
ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, கௌரவமான நாள்.


**கன்னி**
நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**தனுசு**
திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், உடல் நலனில் அக்கறை தேவை.

**மீனம்**
விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.

**பொறுமை ஒரு போதும் தோற்பதில்லை, பொறாமை ஒருபோதும் ஜெயிப்பதில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் - வடமராட்சி உடுப்பிட்டி தெற்கு இளந்தளிர் முன்பள்ளி மழலைகளின் ஆக்கத் திறன் கண்காட்சி கடந்த 1 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9.30 மணிக்கு முன்பள்ளியில் இடம்பெற்றது. (படம்:கஜிந்தன்)

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் தில்லையம்பதி மத்திய கிராம அபிவிருத்திச் சங்கம், மத்திய சனசமூக நிலையம் மற்றும் மத்திய புலம்பெயர் ஒன்றியம் இணைந்து நடத்தும் மத்திய முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நிலைய முன்றலில் இடம்பெறவுள்ளது.

சனசமூக நிலையத்தின் தலைவர் கலாநிதி லயன் சி.ஆனந்தராசா தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலக முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி இணைப்பாளர் இ.அமலன் கலந்து கொள்ளவுள்ளார். (3)



தென்மராட்சி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தின் சாதனையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் பாடசாலை முதல்வர் தி.அபராஜிதன் தலைமையில் இடம்பெற்றது. (படம்:சுபேசன்)



திரு.திருமதி பிரபாகர் தம்பதிகளின் புதல்வி செல்வி அனன்யா பிரபாகரின் பரதநாட்டிய அரங்கேற்றம் 2025 ஜூலை 27 ஆம் திகதி பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

'கலாசூரி' திருமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் வழிகாட்டுதலின் கீழ் பயிற்சி பெற்ற அனன்யாவின் நடன அரங்கேற்றத்தில் பிரதம அதிதிகளாக டாக்டர் (திருமதி) கிருஷாந்தி ரவீந்திரா மற்றும் டாக்டர் தீபால் குணசேன ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ரஷ்யா-அமெரிக்கா இடையே பதற்றம்



(நியூயோர்க்)

ரஷ்யாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசனை சபைத் துணை தலைவர் டிமெட்ரி மித்வதேவ் தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்தால் ஆத்திரமடைந்த அமெரிக்க ஜனாதிபதி டெனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் அணு ஆயுத தாக்குதல் நடத்தும் இரு நீர்மூழ்கி கப்பல்களை ரஷ்யா நோக்கி அனுப்பி வைக்க உத்தரவிட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

ரஷ்யா - உக்ரைன் இடையிலான போரை முடிவுக்கு கொண்டு வர, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முயற்சி மேற்கொண்டு வருகிறார்.

உக்ரைன் மீதான போரால் ரஷ்யா மீது அமெரிக்கா பொருளாதார தடைகளை விதித்துள்ளது. இது தொடர்பாக ரஷ்யா - அமெரிக்கா இடையே மோதல் போக்கு உள்ளது.

இந்நிலையில் தான் திடீரென்று டொனால்ட் ட்ரம்ப் அணுஆயுத தாக்குதல் நடத்தும் 2 நீர்மூழ்கி கப்பல்களை ரஷ்யா நோக்கி அனுப்பி வைக்க உத்தரவிட்டுள்ளார்.

ரஷ்யா தள்ளுபடி விலையில், கச்சா எண்ணெயை இந்தியாவிற்கு விற்பனை செய்து வருவது அமெரிக்காவிற்கு பிடிக்கவில்லை. இதற்காக இந்திய பொருட்களுக்கு 25 சதவீதம் வரி விதித்தார்.

இது குறித்து ரஷ்யாவின் தேசிய பாதுகாப்பு கவுன்சில் துணை தலைவர் டிமெட்ரி மித்தவே கூறியது, வரி விதிப்பு விடயத்தில் ரஷ்ய-இந்திய இறந்து போன பொருளாதாரங்கள் பற்றி பேசுவதற்கு முன்பு 'டெட்ஹேண்ட்' எவ்வளவு ஆபத்தானது என்பது பற்றி ட்ரம்ப் நினைத்து பார்க்க வேண்டும்' என்று கூறியிருந்தார்.



இதனால் ஆத்திரமடைந்த ட்ரம்ப், ரஷ்யா நோக்கி இரு அணுசக்தி நீர்மூழ்கி கப்பல்களை அனுப்பி வைத்தார். ட்ரம்பின் இந்த நடவடிக்கை ரஷ்யா - அமெரிக்கா இடையே பெரும் பதற்றத்தை உருவாக்கி உள்ளது. (நி)

# 'லெவோடோபி' எரிமலை வெடிப்பு



(ஜகர்த்தா)

உலகின் மிகவும் இயங்கும் நிலையில் உள்ள எரிமலையாக கருதப்படும் இந்தோனேசியாவில் உள்ள லெவோடோபியில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

இரட்டை சிகரங்களை கொண்ட இந்த எரிமலையின் லக்கிலக்கி பகுதியில் வெடிப்பு ஏற்பட்டதாக அந்த நாட்டின் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

வெடிப்பின் தாக்கமாக சாம்பல்மிகு புகை வானில் 10 கிலோமீற்றர் உயரம் வரை பரவியுள்ளது. இதைத் தொடர்ந்து, அபாயத்திற்குள்ளான பகுதிகளில் நிலைமையை கண்காணிக்க அதிகாரிகள் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தோனேசிய எரிமலை கண்காணிப்பு மையம், மக்களுக்கு எச்சரிக்கை விடுத்து, பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றுமாறும் அறிவுறுத்தியுள்ளது.

இதனிடையே, எரிமலையின் கீழ் பகுதியில் 6 முதல் 7 கிலோமீற்றருக்குள் வசிக்கும் மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

எரிமலை வெடிப்பு ஏற்பட்டுள்ள சூழலில் கனமழை பெய்தால் எரிமலையிலிருந்து வெளியேறும் எரிமலைக் குழம்பு காரணமாக, மண்சரிவு ஏற்படக்கூடும் என்பதால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (நி)

# எக்ஸ்பிரஸ் ரயில் தடம்புரண்டு விபத்து

## ❖ 30 பேர் படுகாயம்
## ❖ பாகிஸ்தானில் சோகம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் லாகூரில் இருந்து ராவல்பிண்டிக்கு நேற்று முன்தினம் இரவு சென்ற எக்ஸ்பிரஸ் ரயில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில் 30பேர் படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த ரயிலில் 100 இற்கும் மேற்பட்ட பயணிகள் பயணித்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

லாகூரில் இருந்து 50 கிலோமீற்றர் தொலைவில் ஷேகாபுரா ரயில் நிலையம் அருகே சென்றுகொண்டிருந்த போது எக்ஸ்பிரஸ் ரயிலின் 10 பெட்டிகள் தண்டவாளத்தில் இருந்து தடம் புரண்டுள்ளன.

இந்த விபத்தில் ரயில் பயணிகளில் 30 பேர் படுகாயமடைந்ததுடன் விபத்து குறித்து தகவலறிந்த மீட்புக் குழுவினர், சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று படுகாயமடைந்த பயணிகளை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்துள்ளனர்.

மேலும், இந்த விபத்துக்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். (நி)

# வியட்நாமில் வெள்ளப்பெருக்கு 14 பேர் உயிரிழப்பு

(வியட்நாம்)

வியட்நாமின் வடக்கு மாகாணமான டியென் பியெனில் பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி 14 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் நேற்று வெள்ளிக்கிழமை செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு பல மணி நேரம் பெய்த கடும் மழையினால் வெள்ளப்பெருக்கு வேகமாக அதிகரித்துள்ளது.

தாழ்வான பகுதிகளில் உள்ள வீடுகளை வெள்ளநீர் சூழ்ந்துள்ளது, அத்தோடு, மாகாணத்தின் மலைப்பாங்கான பகுதிகளில் திடீர் வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவுகளை ஏற்படுத்தியதாக டியென் போங் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

வெள்ளப்பெருக்கினால் மாகாணத்தின் பல பகுதிகளுக்கான போக்குவரத்து மற்றும் மின்சார இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

ஹாங் பு ஷி கிராமத்தில் இரண்டு சிறுவர்கள் மண்சரிவில் புதையுண்டுள்ளனர். மீட்புப் பணியாளர்கள் அவர்களின் உடல்களைக் கண்டுபிடிக்கவில்லை. மாகாணத்தில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காணாமல் போனவர்களைத் தேடும் பணியில் இடையூறை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகிரங்க அறிவித்தல்

## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி வழக்கு விவகாரத்தில் பொது மக்களின் உதவியை நாடுதல்

வழக்கு இல: AR/804/23 முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் பிரதேசத்தில் உள்ள மனித புதைகுழி குறித்த விசாரணை முல்லைத்தீவு கௌரவ நீதவான் முன்னிலையில் நடத்தப்பட்டு வருகின்றது. முதற்கட்ட தொல்பொருள் பகுப்பாய்வுகள் இந்தப் புதைகுழி 1994-1996 காலகட்டத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்று கூறுகிறது.

காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களைக் கண்டுபிடிப்பதற்கான காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பரந்த முயற்சிகளின் ஒரு அங்கமாக, 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தல், நிருவகித்தல் மற்றும் கருமங்களை ஆற்றுதல்) சட்டத்தின் பிரிவு 12 (ஆ) இன் கீழ், OMP அதன் கடப்பாடுகளின்படி, மனிதப் புதைகுழி மீதான விசாரணையைக் கண்காணித்து வருகிறது.

புதைகுழியில் உள்ள மனித எச்சங்களின் அடையாளம் குறித்து தீர்மானம் மேற்கொள்வதற்குத் துணைபுரியுமாறு காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திடம் முல்லைத்தீவு நீதவான் கோரிக்கை விடுத்துள்ளார். இலங்கையிலும் வெளிநாட்டிலும் உள்ள பொதுமக்களிடம் இந்த வழக்கு தொடர்பான முக்கியமான தகவல்கள் இருக்கலாம் என்பதை காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் நம்புகிறது. எனவே அது குறித்த உண்மையைத் தேடுவதில் உங்கள் ஆதரவு முக்கியமானது.

| Skeleton NO | Features helpful for Identification |
|---|---|
| 001 | No.3174 Undergarments<br>No.3104 Trouser |
| 002 | ஆ.1564 -Underwear |
| 003 | I உ_018 Undergarments<br>No 1204 Trouser |
| 004 | X76 Undergarments<br>த.வி.பு.இ.1333-dog tag |
| 005 | 10546 Trouser |
| 006 | உ_10555 Underwear |
| 007 | No.1781 Underwear |
| 008 | No.302 Brassiere |
| 010 | த.வி.பு.இ.1302 |
| 014 | No.1124 Underwear<br>இ.1124 Trouser |
| 016 | இ.777 Underwear |
| 017 | 499 Underwear |
| 018 | த.வி.பு.இ.0043-dog tag<br>Blood group O positive |
| 019 | எ.306 Underwear |
| 020 | உ..10177 Underwear |
| 023 | X95 Underwear |
| 024 | இ.474 Trouser |
| 025 | இ.701 Underwear |
| 026 | இ.225 Underwear<br>த.வி.பு.இ.225 |
| 028 | இ.458 Underwear |
| 029 | ஈ.17 Underwear |
| 032 | இ.453 Shirt |
| 033 | ஖.1778 Brassiere<br>760 Underwear |
| 034 | எ.599 metallic bracelet |
| 035 | உ_.599 Brassiere |
| 036 | 1907 T-Shirt<br>7907 Brassiere |
| 040 | த.வி.பு.ஓ.3094 - dog tag |
| 042 | 3504 Underwear |
| 044 | 3503 Underwear<br>3471 Shirt |
| 045 | ஓ.3035 Trouser |

எனவே, கொக்குத்தொடுவாய் புதைகுழி குறித்து குறிப்பாக பின்வரும் தகவல்களை காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் நாடுகின்றது.

- குடும்ப உறுப்பினர்கள் அல்லது நெருங்கிய நண்பர்களிகளிடமிருந்து புதைகுழியில் உள்ள எச்சங்கள் குறித்த சாத்தியமான அடையாளங்கள், அவற்றின் உடலியல் அம்சங்கள், உடைகள், முந்தைய காலங்கள் ஏற்பட்டிருந்த காயங்கள் போன்றவற்றை விவரிக்க முடியும்.
- புதைகுழியில் உள்ள எச்சங்களின் நெருங்கிய உறவினர்களைத் தொடர்பு கொள்ளும் தகவல்.
- நேரில் கண்ட சாட்சிகளிடமிருந்து இந்த உடல்கள் இந்த இடத்தில் எப்படி வந்தன என்பது குறித்த சம்பவங்கள் மற்றும் சூழ்நிலைகள் பற்றிய தகவல்.

இந்தத் தகவலின் அடிப்படையில், காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பயிற்சி பெற்ற அதிகாரிகள், இந்த வழக்கு தொடர்பான முக்கியமான தகவல்களைக் கொண்ட சாத்தியமான உறவினர்கள், சாத்தியமான சாட்சிகள் மற்றும் வேறு எவரையும் நேர்காணல் செய்வார்கள். அலுவலக சட்டத்தின் கீழ், இரகசியத் தன்மையை உறுதி செய்வதற்கும் (பிரிவு 12 (இ) (V)) சாட்சி மற்றும் குடும்ப உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் (பிரிவு 13(1) (எ) மற்றும் 18) OMP கடமைப்பட்டுள்ளது. இந்த நேர்காணல்கள் மூலம் உணர்ச்சியைத் தூண்டக்கூடிய துயரத்திற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் OMP அறிந்திருக்கிறது. இதனால் உளவியல் ரீதியான சேவைகளும் வழங்கப்படும்.

இது தொடர்பான தகவல்கள் உங்களிடம் காணப்படுமாயின் எமது தலைமை அலுவலகத்திற்கோ அல்லது கீழ்க்காணும் எமது பிராந்திய அலுவலகங்களுக்கோ 05.08.2025 ஆம் திகதி முதல் 04.09.2025 ஆம் திகதி வரையில் வருகை தந்து தகவல்களை வழங்குமாறு அல்லது எம்மைத் தொடர்பு கொண்டு தகவல்களை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்
இல.40.3 ஆம் மாடி, புத்கமுவ வீதி,
இராஜகிரிய 011 286 1431

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்,
கோட்டை வீதி,பழைய மாவட்ட
செயலக கட்டிடம், மட்டக்களப்பு 065 222 2229

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்,
இல. 54, தர்மாராம வீதி, கோட்டை,
மாத்தறை 041 224 4684

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்,
3 ஆம் மாடி, புதிய கட்டடம், மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம் 021 221 9400

காணாமல் போன ஆட்கள் பற்றிய
அலுவலகம், துணை அலுவலகம், மாவட்ட
செயலகம் முல்லைத்தீவு 021 228 6030

காணாமல் போன ஆட்கள் பற்றிய
அலுவலகம், மாவட்ட செயலகம், மன்னார்
023 222 3929

காணாமல் போன ஆட்கள் பற்றிய
அலுவலகம், A9 வீதி, நீதிமன்ற
அருகாமை,கிளிநொச்சி 021 228 6030

(சி-3555)




## கா! நல்லைக் குமரேசனே!

ஆறுபடை வீட்டிலுறை யாறுமுக மானவிறை
அருமருந் தானகருவே!
ஆறுபொறி யாகவுரு வானதொரு ஞானகுரு
அங்கிங் கெனாதபடியே
ஊறுபடு மாறுவரு மூழ்வினைகள் கூறுபட
ஓங்கியழிக் கின்றதிருவே!
நாறுமலர் மாலையணிந் தாடிவிளை யாடிவரும்
நளிநல்லைக் குமரேசனே!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்.

## நீ எழுந்து வர வேண்டும்...

நீ இருந்து கோலோச்சும் நல்லூர்ப்பதியினிலே
நா நிலத்து மக்களவர் வந்துனது வாசலிலே
வேண்டி வரம் கேட்கின்றார் நீதி வழி வேண்டுமென்று
நீதி பொய்த்துப் போனதுவோ நல்லை வடிவேலவனே!
யாரும் எமைப்பார்க்கவில்லை கூறும் மொழி கேட்கவில்லை
போன வழி போனவர்கள் ஆன பதில் கூற்றும் இல்லை
ஏதும் அறியா எங்களினம் ஏற்றம் பெற வேண்டுமெனில்
நீ எழுந்து கோலோச்ச வேண்டும் நல்லூரவனே!

பரமன் அருமை, இணுவில்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லை மங்கையர்க்கரசியின் சேவை நயப்பும் மணிவிழா வாழ்த்தும்

யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய அதிபர்
உயர்திரு.

## ஆறுமுகராஜா பாலச்சந்திரன்

(SLPS - I)
B.A in English & ELT (OUSL),
Dip in English (OUSL)
Special Trained English,
PGDEM (Merit) - NIE




**சேவைக்கால விபரம்**

**ஆசிரியர் சேவையில்**

யா/அனலைதீவு சதாசிவம் ம.வி
05.01.1990 – 02.02.1993
ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை – பலாலி
03.02.1993 – 31.12.1994
யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்
01.01.1995 – 29.01.1997
வ/கணேசபுரம் விநாயகர் வித்தியாலயம்
30.01.1997 – 30.04.2001
பு/மணல்தீவு றோ.க.த.வித்தியாலயம்
01.05.2001 – 31.07.2003
பு/புத்தளம் இந்து மத்திய கல்லூரி
01.08.2003 – 18.11.2009

**அதிபர் சேவையில்**

பு/புத்தளம் இந்து மத்திய கல்லூரி
(பிரதி அதிபர்) 19.11.2009 – 19.02.2014
யா/இருபாலை சி.சி.த.க (அதிபர்)
20.02.2014 – 01.09.2019
யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்
(அதிபர்) 02.09.2019 – 03.08.2025

எமது பாடசாலையில் அளப்பரிய சேவையாற்றி முப்பத்து ஆறு வருட சேவையை அகவை அறுபதில் நிறைவு செய்து சேவையிலிருந்து ஓய்வுபெறும் எமது அதிபர் அவர்கள் தமது ஓய்வுக் காலத்தில் மகிழ்வோடு எல்லா நலன்களும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

அன்புடன் வாழ்த்தும்: ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம். (C-3559)

## சிறுநீரகம் தேவை

48 வயது உடைய நபர் ஒருவருக்கு B+, O+ குருதி வகையுடைய சிறுநீரகம் தேவை. சிறுநீரகம் தர விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும். (4952)

**077 893 9807**
**077 792 5831**

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
**076 636 3378,**
**076 097 3127**

## காணி விற்பனைக்கு

PALALY ROAD
NEAR FARM
SCHOOL
7 பரப்பு,
3ம் காணி
(SINGER, HAYLES
AREA) (4959)

**077 601 1135**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இலுப்பையடிச் சந்தியின் பாதைக்கு அருகாமையில் 2 பரப்பிற்கு சற்றுக் குறைவான காணி விற்பனைக்கு உண்டு. முன்னறிவித்தலுடன் காணியைப் பார்வையிடலாம். அதி கூடிய விலைக்கு விற்கப்படும். (C-234)

**077 359 7510/077 298 7583**

## வேலையாட்கள் தேவை

திருநெல்வேலியில் உள்ள
Supermarket ஒன்றிற்கு
- முகாமையாளர்
- பணியாளர்கள்
- கணக்காளர்

உடனடியாகத் தேவை
ஆண்/பெண் இருபாலாரும் (4960)

**077 221 0294**


## வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் திருமண வைபவங்கள், பிறந்தநாள் கொண்டாட்டம் மற்றும் பூ மணவறைகள், பலூன் டெக்கரேசன் செய்யக்கூடியவர்கள் தேவை. பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

**சம்பளம் : 45 000 + ot + EPF** (4956)

தொடர்பு : **077 775 0318**

# மரண அறிவித்தல்



## விநாசித்தம்பி மயில்வாகனம் (சிறி)

### (ஓய்வுநிலை நிலஅளவைத் திணைக்கள உத்தியோகத்தர்)

செம்பியன்பற்றைப் பிறப்பிடமாகவும் உபயகதிர்காமம், புலோலியை வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி மயில்வாகனம்(சிறி) அவர்கள் நேற்று (02.08.2025) சனிக்கிழமை எல்லாம் வல்லவனின் பாதக்கமலங்களைச் சரணடைந்தார்.


அன்னார் விநாசித்தம்பி - சின்னாச்சி தம்பதியினரின் அன்பு மகனும் பூபாலசிங்கம் - பாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும் தவமலர் அவர்களின் அன்புக் கணவரும் மலர்மதி, மதிவருணன் (லண்டன்), மலர்விழி, மதனராசா (மதன் ரவல்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வகுலசிங்கம், சந்தியா, கோபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும் நடராசா (ஓய்வுநிலைகிராம அலுவலர்), கனகரத்தினம், சோமசுந்தரம் (ஓய்வுநிலைப்பயிற்றுநர் - இலங்கைப் போக்குவரத்துச் சபை), பவளநாதன் (முன்னைநாள் களஞ்சியக் காப்பாளர் - வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்), சிவசுப்பிரமணியம் (முன்னைநாள் முகாமையாளர் - வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்), விக்னேஸ்வரன் (ஓய்வுநிலை வருமானவரிப் பரிசோதகர்), அமரர் அன்பரசி ஆகியோரின் அன்புச் சகோதரனும் தவபுவனேஸ்வரி, தவபுனிதமலர், தவகுகானந்தம் (குணம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் மகிந்தன் (LB Finance,நெல்லியடி), மதுஷா, நிதுஷா, மகிஷா, மகிசன், பாவலன், கபிலன், அபிஷா ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 04.08.2025 திங்கட்கிழமை முற்பகல் 08.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10.00 மணியளவில் ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கந்தமுருகேசனார் வீதி,
உபயகதிர்காமம், புலோலி தெற்கு. (C - 3560) தகவல்: குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு 18 - 03 - 1959



இறப்பு 02 - 08 - 2025

## ஆறுமுகம் உலகநாதன்

### (சந்திரன்)

காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கருவேலடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் உலகநாதன் (சந்திரன்) அவர்கள் நேற்று 02.08.2025 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - செல்லாச்சி தம்பதியினரின் மகனும் காலஞ்சென்ற தியாகராஜா - நீலாம்பிகை தம்பதியினரின் மருமகனும் கமலாதேவி அவர்களின் அன்புக் கணவரும் சிந்துஜா, காலஞ்சென்ற பவித்திரன், கஜன்துகன், கஜன்துகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் அகிலன், லோகேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் வியான் அவர்களின் பேரனும் காலஞ்சென்றவர்களான பரஞ்சோதி, பொன்னம்மா, பாக்கியம்(புஷ்பம்), நவசிவாயம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் நவமணிதேவி, காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், சற்குணராசா, சத்தியதேவி(சந்திரா), சித்ரா, அம்பிகாவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 04.08.2025 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்கவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(1404)

தகவல் : குடும்பத்தினர்
076 824 7183

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீமையை எதிர்த்து முதலிலேயே போராடுவது இறுதியில் போராடுவதை விட எளிதானது.

– லியானோ டாவின்சி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## முகாமைத்துவ உதவியாளர்களை பாடசாலைகளுக்கு வழங்குங்கள்

***பல எலி சேர்ந்தால் புற்றெடுக்காது*** என்ற நம் தமிழ்ப் பழமொழி மிகச்சிறந்த முகாமைத்துவக் கருத்தைச் சுட்டுவதாகும்.

அதாவது ஒரு குறிப்பிட்ட வேலையை ஒரு குறிப்பிட்ட ஆளணியைக் கொண்டு செய்ய வேண்டும்.

ஆம், ஓர் ஆளணி உச்சமாகச் செய்யக் கூடிய அளவு வேலையைக் கொடுக்கும் போது தான் அந்த வேலைப் பொறுப்பை சம்பந்தப்பட்டவர் உணர்ந்து கொண்டு அதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வார்.

மாறாக, ஓர் ஆளணி செய்யக்கூடிய வேலையைவிடக் குறைவான வேலை அவரிடம் கொடுக்கப்படும் போது, அவர் தனது வேலைத் தளத்தில் அசமந்தப் போக்கைக் கொண்டிருப்பார்.

அதாவது ஒரு குறிப்பிட்ட வேலையில் தேவைக்கு அதிகமான ஆளணியை ஈடுபடுத்தும் போது, அந்த வேலை நிறைவடையாமல் அரைகுறையாகக் காணப்படும்.

இந்த முகாமைத்துவக் கருத்தையே நம் தமிழ்; பல எலி சேர்ந்தால் புற்றெடுக்காது எனக் கூறி வைத்தது.

இப்போது எங்கள் வட மாகாணத்தில் முகாமைத்துவ உதவியாளர்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர்.

அதிலும் சில பிரதேச செயலகங்களில் முகாமைத்துவ உதவியாளர்கள் இருப்பதற்கே இடமில்லாத அளவில் தேவைக்கு அதிகமாக உள்ளனர்.

அதேநேரம் பாடசாலைகளைப் பொறுத்தவரை அங்கு தனித்து கற்பித்தல் பணி மட்டும் நடைபெறுவதில்லை. மாறாக ஒரு பெரும் முகாமைத்துவப் பணியும் அங்கு இடம்பெறுகிறது. எனினும் குறித்த முகாமைத்துவப் பணியை ஆசிரியர்களே செய்கின்றனர்.

இதன் காரணமாக ஆசிரியர்களின் வகுப்பறைக் கற்பித்தல் மற்றும் கற்றலுக்கான கற்றல் என்பன தடைப்படுகின்றன.

எனவே பாடசாலைகளில் இடம்பெறுகின்ற நிர்வாகப் பணிகளில் முகாமைத்துவ உதவியாளர்களை ஈடுபடுத்தும்போது, ஆசிரியர்கள் முழுமையாகக் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட முடிகின்றது.

ஆகவே அதிக மாணவர்களையுடைய பாடசாலைகளுக்கேனும் முகாமைத்துவ உதவியாளர்களை நியமிக்கின்ற செயற்றிட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

அதாவது பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் எங்ஙனம் கல்விசாரா உத்தியோகத்தர்கள் கடமையாற்றுகின்றார்களோ அதேபோல பாடசாலைகளிலும் கல்விசாரா உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் மூலம் நிர்வாகம், மாணவர்களுக்கான உணவு வழங்கும் செயற்பாடு, பாடசாலைக் கணக்குகள் மற்றும் பொருட்பதிவேடுகள், நிதி சார்ந்த ஆவணங்கள் நிர்வகிக்கப்பட வேண்டும்.

இதற்காக நம் மத்தியில் மிகையாக இருக்கக்கூடிய முகாமைத்துவ உதவியாளர்களைப் பாடசாலைகளுக்குப் பகிர்ந்து வழங்கும்போது, பாடசாலைகளும் உச்சமாகச் செயற்படுவதுடன் முகாமைத்துவ உதவியாளர்களும் வினைத்திறனுடன் பணியாற்றக்கூடியதாக இருக்கும் என்பதால், இதுபற்றித் தயவு செய்து சிந்தியுங்கள்.

# பொலிஸாரை பொதுமக்கள் வெறுக்க சட்டப்புரிதல் இன்மையே காரணம்

## நீதியமைச்சர் ஹர்ஷண சுட்டிக்காட்டு

நாட்டின் சட்டத்தைப் பற்றிய சரியான புரிதல் இல்லாததே, பொலிஸ் மற்றும் நீதித்துறையைப் பொதுமக்கள் வெறுக்கக் காரணம் என நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்தார்.

நீதியை அறிந்து கொள்ளுங்கள் என்ற தலைப்பின் கீழ் சட்டம் குறித்து பொது மக்களுக்கு விளக்கமளிக்கும் அமர்வில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

பொதுமக்கள் நீதியைப் பெறுவதற்கான வாய்ப்புகளை வழங்க அவர்களுக்கு பொதுச் சட்டம் பற்றிய அறிவும் புரிதலும் அவசியம்.

சட்டம் குறித்த புரிதல் இல்லாததால் தங்கள் பிரச்சினைகளை எங்கு எடுத்துச் செல்வது என்று அவர்களுக்குத் தெரியவில்லை.

பொருளாதார சிக்கல்கள் மற்றும் மொழிப் பிரச்சினைகள் நீதியைப் பெறுவதற்கான முக்கிய தடைகளாக உள்ளன.

சட்டத்தைப் பற்றிய சரியான புரிதல் இல்லாததே, பொலிஸ் மற்றும் நீதித்துறையைப் பொதுமக்கள் வெறுக்கக் காரணம்.

பொதுமக்களுக்கு சேவைகளை வழங்குவது நமது முதன்மைப் பொறுப்பு என்பதை அரச ஊழியர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எமது அரசாங்கத்தின் கீழ் பொதுமக்கள் சேவைகளைப் பெற அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களைப் பின்தொடர வேண்டியதில்லை.

அத்துடன் சட்டம் அனைவருக்கும் சமமாக இருக்க வேண்டும். அடிப்படைச்சட்டம் பற்றிய அறிவு இல்லாதது பொதுமக்களுக்கு மட்டுமல்ல, சில அரச ஊழியர்களுக்கும் ஒரு பெரிய பிரச்சினையாக மாறியுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார். (ம-7)

## நல்லூர் உற்வசகால தெய்வீக இசையரங்கு

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இலங்கை இளங் கலைஞர் மன்றமும் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபமும் இணைந்து வழங்கும் தெய்வீக இசைய ரங்கு இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 6.45 மணி முதல் 8.30 மணி வரை நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வயலின் இசையில், வயலின் - செல்வி. கணேசாயினி ஸ்ரீனிவாசன் மற்றும் செல்வன். குமரேசன் சயந்தன், மிருதங்கம்- ம.லோகேந்திரன், கெஞ்சிரா - செல்வன். புவனேஸ்வரன் வேணுகாந்தன், கடம் - செல்வன் கருணாகரன் தஷாணன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.


அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள இசையரங்கு நிகழ்வில் பாட்டு- செல்வன். புலேந்திரன் கோபிசாந்த், வயலின்- திருமதி வனஜா ஈஸ்வர சர்மா, மிருதங்கம்- மு. சுலக்சன், கெஞ்சிரா- செல்வன் புவனேஸ்வரன் வேணுகாந்தன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (3)

## விபத்தில் 42 பேர் காயம்

கேகாலை - அவிசாவளை வீதியின் தெஹியோவிட்ட பகுதியில் நேற்று (02) காலை ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் 42 பேர் காயமடைந்து சிகிச்சைக்காக அருகிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-7)

## நல்லூரான் அருள்பெற்ற அருட்பெரும் பெண்சித்தர் சடையம்மா



சடையம்மாவின் குரு பூசை தினத்தை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.

ஈழத்து சித்தர்கள் என்றாலே பல சுவாமிகள் தான் எங்கள் நினைவுக்கு வருவார்கள் ஆனால் ஈழத்து சித்தர் மரபிலே சுவாமினிகளும் இருந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஈழத்து முதலாவது பெண் சித்தராக அடையாளப்படுத்தப்படுபவர் அன்புக்கும் வழிபாட்டுக்குமுரிய சடையம்மா அவர்கள் ஆன்மீக வழி அன்பர்களுக்கு அவர் பெண்சித்தராக இருந்தாலும் அனைத்து பெண்களுக்கும் ஒரு முன்னோடியான ஆளுமைமிக்க தமிழ் பெண்ணாக வாழ்ந்தவர் என்பது சடையம்மாவினுடைய ஆராயப்பட வேண்டிய இன்னொரு பக்கமாக இருக்கிறது.

1865.08.19(ஆவணி ரோகினி) நன்னாளில் வீரகத்திப்பிள்ளை சின்னாச்சிப் பிள்ளை தம்பதிகளுக்கு மகளாக திருநெல்வேலி கிழக்கில் அவதரித்தார். முத்துப்பிள்ளை எனும் பிள்ளை திருநாமம் சூட்டி மகிழ்ந்த பெற்றோர் குழந்தைக்கு 11 வயதாகும் போது கதிரேசனார் என்பவரை திருமணம் செய்து வந்தனர். ஒருமுறை கணவன் நேரில் வியப்படைந்த நல்லூர்கந்தப்பெருமான் கனவில் தோன்றி அம்மையாரை வழிப்படுத்தவே, முருகன் கட்டளைப்படி வைரவப் பெருமான் சந்திதிக்கு கணவனை அழைத்து வந்து 40 நாட்கள் அங்கு தங்கியிருந்து முருகனை வழிபட்டு இருக்கிறார். ஒரு முறை இவர் கடையிற்சுவாமிகளை சந்திக்க புறப்பட்ட வேளை அவரே நேரில் வந்து "கந்தனை மறவாது வந்தனை செய் அவரே நம் சொந்தம்" என்று ஆசிகூறி சென்ற பின்னர் கணவனும் குணமாகியிருக்கிறார். அதன் பின்னரும் இவர் நல்லூர் கந்தனிற்கு தொடர்ந்து பணிபுரிந்து வந்திருக்கிறார்.

2 பெண்குழந்தைகளுக்கு தாயாகி இல்லறத்தில் இருந்து கொண்டே தன்னைத் தன்னால் அறிந்து கொண்ட அம்மையார் இல்லறவாழ்வு நீங்கி கணவனிடம் விடை பெற்று துறவற வாழ்க்கைக்கு தலைப்பட்டார். அவ்வாறாக அவர் துறவற வாழ்வை ஆரம்பித்த இடம் தற்போது நல்லூர் தேர் முட்டியின் முன்னால் அறுபத்து மூன்று நாயன்மார் குரு பூசை மடம் என்று அழைக்கப்படும் இடமாகும். அது முன்னர் சடையம்மா மடம் என்றே அழைக்கப்பட்டது. அம்மையார் தான் வாழ்ந்த காலத்தில் 63 நாயன்மார்களின் குருபூசைகளையும் தவறாது பூஜித்து அன்னதான பயணிகளையும் செய்து வந்தார் என்பது குறிப் பிடத்தக்கது.

திருநெல்வேலியில் தற்போது புதிதாக குடமுழுக்கு நடந்த வாலை அம்மன் கோவிலுக்கும் சடையம்மாவுக்கும் நெருங்கிய தொடர்புள்ளது. அங்கு அவர் தியானநிலையில் இருந்து வாலையம்மனின் அருட்பார்வை கிட்டியது. இன்று அக்கோவிலின் யாகசாலையின் மேற்புரம் சடையம்மாவின் திருவுருவத்தை எழுந்தருளச் செய்துள்ளார்கள்.

சடையம்மா ஈழத்தில் மட்டு மல்லாது திருச்செந்தூரிலும் மடம் அமைத்து பல்வேறு சம சமூகப் பணிகளை ஆற்றியிருக்கிறார் என்பது அவரது ஆளுமையைக் காட்டுகிறது. தற்போது அந்த திருச்செந்தூர் மடம் மட்டுமே அவரது பெயரில் இன்று வரை இயங்கி பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பணிகளை செய்துவருகிறது.

சடையம்மா தன்னுடைய இறுதிக்காலத்தில் மாருதப்புர வீக வள்ளிக்கு ஈசன் வரமருளிய இடத்தில் (கீரிமலையில் மாருதப்புரவீக வள்ளி தவம் செய்த குனறிற்கு அருகில்) ஒருமடம் அமைத்து மக்களுக்கான பணிகளைச் செய்து தனக்கான ஆன்மீக சாதனைகளையும் செய்து ஆடி அனுசம் நன்னாளில் 05.08. 1936 சமாதியடைந்தார். யோகர் சுவாமி தலைமையில் அம்மையாருக்கு சமாதி வைக்கப்பட்டது.

அ.நவினாசினி
கோண்டாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணுக்குள் புதைக்கப்பட்டிருந்த துப்பாக்கி ரவைகளுடன் மீட்பு

மட்டக்களப்பில் நிலத்தில் புதைக் கப்பட்டிருந்த நிலையில் ரி-56 ரகத் துப்பாக்கி ஒன்றும் ரவைகளும் விசேட அதிரடிப்படையினரால் மீட்கப்பட் டுள்ளன.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பூம்புகார் பகுதியிலுள்ள காணி யொன்றில் கட்டுமானப்பணிகள் இடம் பெற்று வரும் நிலையில், மலசலக் கூடத்திற்குக் குழி அமைப்பதற்காக நிலத்தைத் தோண்டும் போது புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் துப்பாக் கியை அவதானித்தவர்கள் உடனடி யாக விசேட அதிரடிப்படையினருக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற் குச் சென்ற விசேட அதிரடிப்படை யினர் ரி-56 ரகத் துப்பாக்கியையும், 50 துப்பாக்கி ரவைகள், 2 மெகசின்களை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட ஆயுதங்கள் மட்டக் களப்பு பொலிஸ் தலைமையகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7)

## வட மாகாண...

புதிய கல்விச் சீர்திருத்தம் குறித்து நேற்று சனிக்கிழமை வடக்கு மாகாண செயலக கேட்போர் கூடத்தில் நடை பெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் உரையாற்றும் போதே பிரதமர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கை யில்,

தரமான கல்வி ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து வடக்கு மாகாணத்திற்கு நாம் எடுத்துக் கூற வேண்டிய அவசியம் இல்லை அவர்க ள் நன்கு அறிவர்.

நாம் ஜனநாயகரீதியில் முன்னேற சமத்துவம் நல்லிணக்கத்துடன் வாழ பொருளாதார ரீதியில் வளர்ச்சி அடை யக் கல்வி முக்கியம்.

வடக்கு மாகாணத்தில் திறம்பட செயற்படக்கூடிய பாடசாலைகள் உள்ளன. அதேவேளை மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் கல்வியின் தரம் தொடர்பில் திருப்தி அடைய முடியாத பாடசாலைகளும் காணப்படுகின்றன.

இந்த ஏற்றத்தாழ்வு இனி இருக்கக் கூடாது. அதற்கே புதிய கல்வி சீர் திருத்தம் அவசியம் என்கிறோம். கல்வி யில் வளமையாகவே மேல் இடத்தில் இருக்கும் வடக்கு மாகாணம் இம் முறை க.பொ.த சாதாரண தரப் பரீட் சையில் சோபிக்க தவறியமைக்கு ஏற்றத் தாழ்வான முறைமையே கார ணம்.

இவ்விவகாரத்தை எப்போதும் போல விட்டுவிட முடியாது. ஏனெனில் நாம் எமது மாணவர்களின் கல்வித் தரத்தையே இழந்து வருகிறோம்.

இங்குள்ள வெற்றிடங்கள் நியம னங்கள் தொடர்பிலான பிரச்சினை களை அடையாளம் காண வேண்டும். அனைத்துப் பிரதேச பாடசாலைகளி னதும் கல்வி அடைவு மட்டத்தை உயர்த்தக் கூடிய வகையில் நியம னங்கள் அமைய வேண்டும்.

உதாரணத்திற்கு யாழ்.கல்வி வலயம் யாழ்ப்பாண பிரதேச பாடசா லைகளிலோ அனைவரும் பணிபுரிய முடியாதல்லவா

வடக்கு மாகாணத்தின் 13 கல்வி வலயங்களும் ஐந்து மாவட்டங்களும் முக்கியமானவை. இவை அனைத் தின் கல்வித் தரமும் மேம்பட்டாலேயே வடக்கின் கல்வித்தரம் மீள உயரும். எனவே இது குறித்து நமது கல்வி சீர்திருத்தத்தில் முக்கிய கவனம் செலுத்தப்படும் என்றார். (ம-7,33)


## சிறுகுறிஞ்சா இலை தேவை

மருந்துப் பொருட்களின் உற்பத்திக்கும் மருத்துவ ஆய்வுத் தேவைகளிற்காகவும் பெருமளவில் சிறுகுறிஞ்சா (Gymnema lactiferum) இலை தேவை. சிறிய அளவிலேனும், தொடர்ச்சியாக வழங்கக் கூடியவர்களும் தொடர்பு கொள்ளவும்.

விலை 1kg-100/= அதிக பராமரிப்பு தேவையற்ற சிறுகுறிஞ்சாக் கன்றுகளை தோட்ட நிலங்களின் வேலியோரம் நாட்டி தொடர்ச்சியாக வழங்கக் கூடியவர்கள் தங்களைப் பதிவுசெய்யலாம். உற்பத்தி செய்யப்படவுள்ள கன்றுகள் விவசாயிகளுக்கு விலைக்கு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு (4958)

077 805 2520

## வேலைவாய்ப்பு

யாழில் இயங்கும் பல சரக்குக் கடை மற்றும் சுப்பர் மார்க்கற்றுக்கு கீழ்க் காணும் ஆட்கள் தேவை.

01.Administration
02.Computer Billing+ Cashier
03.Sales Assistant
04.Driver (AD Licence)
05.Packing - பொதியிடல்
06.Part time - 5.00pm to 10.00 pm


வயது எல்லை 18 - 35
யாழ்.மாநகர சபைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. (4953)

077 419 5209
077 419 5218


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 150 | 200 | 250 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 190 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 180 | 250 | 300 | 250 |
| தக்காளி | 160 | 200 | 150 | 130 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 300 | 250 |
| கோவா | 250 | 280 | 300 | 250 | 300 |
| கரட் | 400 | 400 | 350 | 350 | 450 |
| பூசணி | 100 | 140 | 100 | 100 | 80 |
| புடோல் | 100 | 100 | 100 | 100 | 150 |
| வாழைக்காய் | 160 | 130 | 100 | 120 | 140 |
| சின்ன வெங்காயம் | 200 | 150-300 | 350 | 350 | 250 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 120 | 120 | 150 |
| பாகற்காய் | 300 | 400 | 350 | 500 | 400 |
| வெண்டக்காய் | 150 | 100 | 150 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 250 | 200 | 200 | 280 | 350 |
| பயற்றங்காய் | 200 | 200 | 100 | 300 | 150 |
| லீக்ஸ் | 300 | 250 | 150 | 250 | 300 |
| பீற்றூட் | 120 | 150 | 250 | 140 | 200 |
| கறிமிளகாய் | 600 | 600 | 600 | 550 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 600 | 600 | 350 | 500 |
| போஞ்சி | 800 | 700 | 800 | 480 | 800 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 250 | -- | 180 |
| கீரை - 1 பிடி | 100 | 60-120 | 150 | 100 | 120 |
| தேசிக்காய் | 200 | 100 | 150 | 180 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 120-200 | 130-180 |
| இராசவள்ளி | 800 | 650 | 500 | 500 | 800 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 350 | 250 | 450 |
| முள்ளங்கி | 100 | 120 | 150 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 80 | 100 | 80 |
| வல்லாரை | 80 | 70 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 120 | 200 |

# IMEF - 2025
# மருத்துவர் கண்காட்சி



கொழும்பு இலங்கை வெளி நாட்டில் மருத்துவம் படிக்க விரும்பும் இலங்கை மாணவர் கள் அதிகரித்து வருகிறார்கள். அதனால் தெளிவான மற்றும் நம்பகமான வழிகாட்டல் மிக வும் முக் கியமானதாகிவிட்டது. ஆகவே ISC Education AD IMEF 2025 B International Medical Education Fair- L நடத்தவிருக்கிறது. இது முழு மையாக வெளிநாட்டு மருத்துவ கல்விக்கான மாபெரும் நிகழ் வாகும்.

இந்த நிகழ்வு 2025 ஒக ஸ்ட் 16ஆம் திகதி சனிக் கிழமை கொழும்பு Cinnamon Grand ஹோட்டலின் IVY Room-இல் நடைபெறும் ஒரு நாள் நிகழ் வாக நடக்கிறது இதில் பெலரஸ், சீனா, மலேசியா, அவுஸ்திரே லியா ஆர்மேனியா மற்றும் ஜார் ஜியா நாடுகளில் இருந்து SLMC அங்கீகாரம் பெற்ற மற்றும் சர்வ தேசம் முழுவதும் அங்கீகரிக் கப்பட்ட பல்கலைக்கழகங்களை ஒன்றிணைக்கப்பட்டுள்ளது.

சாதாரண கண்காட்சிகளை விட IMEF மாணவர்களுக்கு தகவல் மட்டுமல்லாமல் உண் மையான புரிதலையும்வழங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் மற்றும் பெற்றோர் களுடன் வெளிநாட்டில் பயின்ற மருத்துவர்கள் [illegible] மாணவர்கள் மற்றும் அனுப வமுள்ள ஆலோசகர்களுடன் நேரடியாக பேசும் அரிய வாய்ப் பாக இது இருக்கிறது.

இந்த கண்காட்சியின் முக் கிய சிறப்பம்சம் தேர்ந்தெடுக் கப்பட்ட பல்கலைக்கழகங்கள் வழங்கும் 50% வரையான உதவித்தொகை வாய்ப்புகள் இது மாணவரின் கல்வி நிலை நிதிப் பின்னணி மற்றும் அனுமதி விதிகளின் அடிப்படையில் வழங் கப்படுகின்றன. மேலும் வழக்க மான தகுதிகளைப் பெறாத மாண வர்களுக்கும் மருத்துவம் பயில விருப்பமுள் ளவர்களுக்கு IMEF தனிப்பட்ட நுழைவு பாதைகளை யும் வழங்குகிறது.

ISC education மூலம் IMEF ஆனது இலட்சியம் மற் றும் வாய்ப்புக்களை இணைக் கும் நம்பிக்கையான ஒரு பால மாக மாறியுள்ளது. நிகழ்வில் உள்ள ஒவ்வொரு பல்கலைக் கழகமும் சரிபார்க்கப்பட்டவை. ஒவ்வொரு பிரதிநிதியும் நம்ப கமான ஆலோசனைகளை வழங்க பயிற்சி பெற்றவர்கள் மேலும் மாணவர்கள் முதல் நாளிலிருந்தே இறுதி ஆண்டு வரை முழுமையாக கவனத் தில் கொள்ளப்படுவார்கள். இந்த நிகழ் வில் கலந்து கொள்ள கட்டணம் இல்லை. அதிக வரவு காரணமாக மாணவர்கள் முன்பதிவு செய்ய ஊக்கு விக்கப்படுகிறார் கள்.

**இடம்:** IVY Room, Cinnamon Grand, கொழும்பு.
**திகதி:** சனிக்கிழமை 16 ஒகஸ்ட் 2025.
**நேரம்:** காலை 9.00-பிற் பகல் 3:00.
**பதிவுக்காக:** 0777 55 66 66 என்ற எண்ணுக்கு அழைக் கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்று நாள்...

மேற்படி இளைஞனுக்கு கடந்த 29, 30, 31ஆம் திகதிகளில் காய்ச்சல் ஏற்பட்டதனால் தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

பின்னர் முதலாம் திகதி நெஞ்சுக் குத்து ஏற்பட்டதைத் தொடர்ந்து சாவகச் சேரி வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு பின்னர் யாழ்.போதனா வைத் தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று சனிக்கிழமை (02) பிற்பகல் 3.00 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவா யம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7,60)

## ஒழுங்கையில்...

வீட்டு ஒழுங்கையில் படுத்து உறங் கிய குடும்பஸ்தரைக் கவனிக்காத நிலையில் டிப்பர் வாகனத்தைச் செலுத்தி வந்த குறித்த குடும்பஸ் தரின் மைத்துனர் வீடொன்றில் சல் லிக் கல்லினை இறக்கிவிட்டு வாக னத்தைத் திருப்பியுள்ளார்.

இரவு நேரமாகையால் குறித்த ஒழுங்கையில் குறித்த குடும்பஸ்தர் படுத்திருந்ததை அறிந்திருக்காத நிலையில் வாகனம் ஒழுங்கையில் படுத்திருந்தவர் மீது ஏறியுள்ளது. நேற்றுக் காலையிலேயே குறித்த குடும்பஸ்தர் டிப்பர் வாகனம் ஏறிய தில் மரணமடைந்துள்ளமை தெரிய வந்துள்ளது.

குறித்த குடும்பஸ்தர் வாகனத்தில் நசுங்கிய நிலையில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதை அறிந்த மைத்துன ரான வாகனச்சாரதி நெடுங்கேணிப் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார். (ம-7,250,316)

## பயங்கரவாதச்...

இந்தக் கூட்டத்தின் பின்னர் தமிழ ரசுக் கட்சியின் பதில் பொதுச் செய லாளர் எம்.ஏ.சுமந்திரன் ஊடகங்க ளுக்கு இவ்வாறு கருத்துத் தெரிவித் தார்.

மேலும் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு மாற்றீடாகப் புதிய சட்டத் தைக் கொண்டுவரும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம் என அவர் குறிப்பிட் டார். (ம-7,33)

## செம்மணியில்...

பட்டோர் சார்பில் முன்னிலையான சட் டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் தெரிவித் தார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், மேற்படி நடவடிக்கையில் பங்குபற் றும் நபர்களது பெயர், அடையாள அட்டை இலக்கம் (அல்லது கடவுச் சீட்டு இலக்கம் அல்லது சாரதி அனு மதிப்பத்திர இலக்கம்), முகவரி என்பன நீதிமன்ற உத்தியோகத்தர் களால் பதிவு செய்யப்படும்.

இருபத்தொரு (21) வயதிற்கு மேற் பட்ட நபர்கள் மாத்திரம் மேற்படி நட வடிக்கையில் பங்குபற்ற அனுமதிக் கப்படுவார்கள்.

மேலும் பங்குபற்றும் நபர்கள் மேற் படி நீதிமன்ற நடவடிக்கையையோ அல்லது காண்பிக்கப்படும் பொருட்க ளையோ ஒலி, ஒளிப்பதிவு செய்யவும் எந்தவொரு இலத்திரனியல் உபகர ணங்களை எடுத்துவரவும் தடை விதிக் கப்பட்டுள்ளது என்றார். (ம-7,33)

## வட மாகாணத்...

தெரிவித்துள்ளார்.

கல்விச்சீர்திருத்தம் தொடர்பான தேசிய வேலைத்திட்டத்தின் எட்டா வது அமர்வு பிரதமரும் கல்வி அமைச் சருமான ஹரிணி அமரசூரிய தலை மையில் நேற்று சனிக்கிழமை வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலு வலகக் கேட்போர்கூடத்தில் இடம் பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரை யாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், வட மாகாணமே இலங்கையில் அதிக வறுமைக்குட்பட்ட பிரதேச மாக இருக்கிறது. இலங்கையில் வறுமையான மாவட்டமாக மொனரா கலை மாவட்டம் இருந்த நிலையில் தற்போது அது முல்லைத்தீவு மாவட் டமாக மாறியிருக்கிறது.

இதனால் வறுமையுடன் இணை த்து கல்வி தொடர்பான பிரச்சினை யையும் அணுக வேண்டியுள்ளது. வறுமையிருக்கும் இடங்களில் எல் லாம் கல்விப் பிரச்சினையும் காணப்படு கிறது. கல்வியில் பின்னடைவைச் சந்தித்துள்ள இடங்களில் வறுமை அதிகரித்துள்ளது. மேலும் சமூகச் சீரழிவுகள், குற்றச்செயல்கள் அதிக ரித்துக் காணப்படுகிறது. இன்று யாழ் மாவட்டத்திலும் இந்தச் சவால்கள் காணப்படுகிறது. இந்தச் சவால்களில் இருந்து மீண்டு புதிய யாழ்ப்பாணத்தை கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் இருக்கிறது.

இதேவேளை வட மாகாணத்தில் 982 பாடசாலைகள் காணப்படும் நிலையில் அவற்றில் 70க்கும் மேற்பட்ட பாட சாலைகள் மூட வேண்டிய நிலை க்குத் தள்ளப்பட் டுள்ளதாகவும் தெரிவித்தார்.

10 பிள்ளை கள் கல்வி கற் கும் 35 பாடசா லைகள் காணப் படுவதாகவும் 11-20 பிள்ளை கள் கல்வி கற் கும் 64 பாட சாலைகளும் 20 - 50 பிள்ளைகள் கற்கும் 171 பாட சாலைகள் இருப் பதாகவும் 50-100 பிள்ளைகள் கற் கும் 174 பாடசா லைகள் இருப்ப தாகவும் தெரிவிக் கப்படுகின்றது.

இதில் 40க் கும் மேற்பட்ட பாடசாலைகள் எவ்விதக் கல்வி நடவடிக்கை களும் முன்னெ டுக்க முடியாத நிலைக்குத் தள் ளப்பட்டுள்ளதா கத் தெரிவித்தார். (ம-7)

## அம்...

நெல் வயல் தொடர்பான தக ராறில் துப்பாக் கிச் சூடு நடந்த தாக பொலிஸார் தெரிவித்தனர்.

உரிமம் பெற்ற துப்பாக்கியால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக வும், பாதிக்கப் பட்டவர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்ட தாகவும் கூறப் படுகிறது.

துப்பாக்கிச் சூடு நடத்திய நபர் பின்னர் துப்பாக்கியுடன் ஹங்கம பொலிஸ் நிலையத்தில் சரணடைந் துள்ளார். (ம-7)

## 4 எலும்புக்...

ஏ.ஏ.ஆனந்தராஜாவின் மேற்பார்வை யில் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய அகழ்வில் 18 வயதுக் குட்பட்ட சிறுவர்கள் இருவருடைய மனித எச்சங்கள் உட்பட 4 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் புதிதாக இனங் காணப்பட்டதோடு ஏற்கெனவே இனங் காணப்பட்ட 5 மனித எலும்புக்கூட்டுத் தொகுதி முற்றாக அகழ்ந்தெடுக்கப் பட்டுள்ளன.

இதுவரை செம்மணியில் 126 எலும் புக்கூட்டுத் தொகுதிகள் இனங் காணப்பட்டுள்ளதோடு அதில் 117 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. (ம-7,33)


மஹஜன சம்பத
திகதி 2025.08.02
சீட்டிழுப்பு இலக்கம் 5909
X 3 4 2 9 8 7
அத சம்பத X 2 9 8 7
சீட்டிழுப்பு இலக்கம் 484
National Lotteries Board

சுப தவசக்
2025.08.02
0025
மிதுனம் 09 18 33 37

தன நிதானய
திகதி - 2025.08.02
சீட்டிழுப்பு இலக்கம் - 1939
Z 03 33 39 66 Z
Double Chance 73438

மெகா பவர்
திகதி 02/08/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2257
U 06 09 27 37 69

ஜய JAYA
திகதி 2025.08.02
சீட்டிழுப்பு இலக்கம் 0177
B 4 5 5 4

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4151
சீட்டிழுப்பு திகதி 02.08.2025
K 41 43 62 69
K

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.08.02
சீட்டிழுப்பு இலக்கம் 1218
கடகம் 24 28 57 61 கடகம்
83349

உத்தியோகபூர்வ முடிவுகள்
02.08.2025 வெற்றி வாரம் 0617
D 2 6 6 7 8 5
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21.145.392.80
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2883
சீட்டிழுப்பு திகதி 2025.08.02 தினம் சனிக்கிழமை
05 06 08 77 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,873,203.20

சனிதா
திகதி 02.08.2025 வெற்றி வாரம் 5044
06 32 43 71 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,579,650.40

சசிரி
வெற்றி வாரம் 739
சீட்டிழுப்பு திகதி 02.08.2025
சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 20 29 30
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4595
சீட்டிழுப்பு திகதி 02.08.2025 தினம் சனிக்கிழமை
02 23 31 50 கும்பம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,895,240.40

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
N 17 07 17 43 54
2059
02.08.2025 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.585,700,857.00

அட கோடீபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம்: 2709
சீட்டிழுப்பு திகதி: 2025.08.02
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.78,104,316.00
22 31 33 71 V


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடா - வரி இல்லாமல்
### விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3710/-
11-16 Kg 2660/-
21-27 Kg 2480/-

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-3562)

o UK 11Kg - 1420/- o France 11Kg - 2220/- o Germany 11Kg - 2010/-
o Swiss 11Kg - 2480/- o Australia 11Kg - 2150/- o Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237



## வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள village hotel and indian restaurantற்கு சமையல் அனுபம் உள்ள வேலையாட்கள் தேவை

- உணவு பரிமாறுபவர்கள் (waiter)
- சுத்திகரிப்பு தொழிலாளர்கள் (cleaning staff)

(4942)

**076 830 3931**



திருநெல்வேலிச் சந்தி அருகில்

## காணி விற்பனைக்குண்டு

- 1½ பரப்பு
- 2 பரப்பு
- 1 பரப்பு
- பலாலி வீதி - 50m தூரம்
- மக்கள் வங்கி - 100m தூரம்

(4957)

**077 253 2575**



## காணி விற்பனைக்கு

சுதுமலை அம்மன் ஆலயத்தில் இருந்து மிக அண்மையில் பிரதான வீதியில் இருந்து 2 ம் காணி 50m 1 பரப்பின் விலை 60,00000/=

(4940)

**076 428 4896**



## மந்திகை சிலையடிப் பகுதியில் காணி விற்பனைக்குண்டு

வடமராட்சி மந்திகை சிலையடி, பெற்றோல் நிரப்பு நிலையம் என்பவற்றுக்கு முன்பாக 13 அடி பிரதான றோட்டை அடையும் பாதையுடன் கூடிய 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

(1403)

**077 500 2162**



## மணமகள் தேவை

இந்து, கௌரவ குடும்பம், 1990 இல் பிறந்த, பூரம் நட்சத்திரம், 7 இல் செவ்வாய், கிரகபாவம் - 33 உள்ள அரச உத்தியோக மணமகனுக்கு 5 வயது வித்தியாசத்தில் அரச தொழில் புரியும் மணமகள் தேவை.

(4947)

**077 914 7318/076 668 8199**



## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கோப்பாய், பண்டத்தரிப்பு, கொழும்பு, சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர், சங்கானை

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-

(C-3562)

0777-068-777
v2vacancies@gmail.com



## உடனடி வேலைவாய்ப்பு

வடமராட்சியில் நன்மதிப்பைப் பெற்ற பிரபல்யமான, பல கிளைகளைக் கொண்ட வெதுப்பக உற்பத்தி நிறுவனத்திற்கு பல்வேறுபட்ட வேலைவாய்ப்புக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

01.உற்பத்தியாளர்
02.விற்பனையாளர்
03.பொதி செய்வோர்
04.களஞ்சிய காப்பாளர்
05.கிளை முகாமையாளர்

போன்ற பல்வேறுபட்ட வேலைவாய்ப்புக்கள் காணப்படுகின்றன. மேற்கூறப்பட்ட வேலைகளுக்கு அனுபவம் உள்ளவர்களும் மற்றும் வேலை பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

குறிப்பு:
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

(4941)

தொடர்பு : **077 269 0764**



## வேலையாட்கள் தேவை

### ஸ்ரீ மாருதி பிறிண்டேர்ஸ்

நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

- வரவேற்பாளர் (Receptionist)
- கணினி பக்க வடிவமைப்பாளர் (Computer Page Layout Designer)
- புத்தகக் கட்டுனர் (Book Binder)

(C-3557)

இல. 555, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 0777917680



## பணியாளர் தேவை

கோண்டாவிலில் இயங்கிவரும் உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- வரவேற்பாளர்
- உணவு பரிமாறுபவர் (ஆண்/ பெண்)
- சமையல் உதவியாளர்

(1401)

**077 593 8090/077 834 8336**



## வைத்தியம்

கை விறைப்பு |கால் விறைப்பு |கை எரிவு| கால் எரிவு
குழந்தை இன்மை| நாட்பட்ட தலைவலி
மூலம் |கழுத்து வலி | கால் பாத விறைப்பு
முள்ளந்தண்டு வலி |முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி|
இருதயவலி | தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்.
வயிற்றுப்புண் |அல்சர்மிகச்சிறந்த மூலிகை,
Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669

(1405)



Hari Group Of Companies
Proudly Presents

இன்னிசை கானங்கள்




(1394)

AUG 3RD 2025

ஜீ தமிழ் பிரபல தொகுப்பாளினி அர்ச்சனா உடன்

மற்றும் ஜீ தமிழ் புகழ் சதீஷ் இசைக்குழு

6 PM ONWARDS

ARIYALAI COMMUNITY CENTRE GROUND

TICKETS AVAILABLE ON

HARI AIR TRAVEL — 681, HOSPITAL RD, JAFFNA
HARI ENGINEERING — PUTHUTHODAM, ALVAI SOUTH, NELLIYADY
JEEVAN PHARMACY — DR SUBRAMANIAM RD, CHUNNAKAM
TOP SILK — NO 17A, K.K.S RD, MARUTHANARMADAM
E-MOBILE SHOP — MAIN STREET, NELLIADY
SINGHAGIRI — NO 1 STANLEY RD, JAFFNA

ONLINE TICKETS AVAILABLE ON bookmyshow

GOLDEN PASS 5000/= | SILVER PASS 3000/= | BRONZE PASS 2000/= | NORMAL PASS 1000/= (PHYSICAL TICKETS ONLY)

Silver Sponsor — SK SUXUS WEAR
Official Hospitality Partner — MANGO MANSION
Official Photography & Videography Partner — AGARAM STUDIO
Official Digital Media Partner — IBC தமிழ், LANKASRI
Official Makeup Partner — FIONA
Official Website Partner — SAKSI TV
Official Printing Partner — saravana PRESS

076 148 6461 | 076 148 6462

EVENT MANAGEMENT BY NARMATHAN | NAREEN CREATIONS



## Happy Supermarket - உரும்பிராய்

| | |
|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 209/= Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 158/= |
| 1Kg சிவப்பு பருப்பு | - 241/= |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 359/= |
| 1Kg றவை | - 285/= |
| 1Kg சம்பா அரிசி | - 230/= |
| 1Kg வெள்ளைப் பச்சை | - 205/= |
| 1Kg நீட்டல்ப்பச்சை | - 239/= |
| 10Kg விஜிதா அரிசி | - 2800/= |
| 1Kg ஈக்குத்தீட்டல் | - 195/= Max 3Kg |
| 1Kg கீரிச்சம்பா | - 255/= |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 1100/= |
| 1Kg கடலை | - 384/= |
| 1Kg சோயா | - 330/= |
| 01 அங்கர் யோகட் | - 45/= ~~70/=~~ |



400g Anchor 1150/= ~~1280/=~~



1kg சன்லைட் பவுடர் 280/= ~~320/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

(1406)

Happy Supermarket
0777 8080 30



## விற்பனைக்கு

01. யாழ்.நல்லூர் கோயிலுக்கு அண்மையில் குறுக்கு வீதியில் 10 பரப்புக் காணியும்
02. யாழ். கே.கே.எஸ் வீதியில் தட்டாதெருச் சந்திக்கு அண்மையில் கே.கே.எஸ் வீதி முகப்புடன் 10 பரப்பில் அமைந்த அதி நவீன கட்டடமும்
03. யாழ்.கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் நாவலர் வீதி முகப்புடன் 10 பரப்புக் காணியும்
04. யாழ். ஆனைப்பந்தி சந்திக்கு அண்மையில் 2 ½ பரப்புக் காணியும்
05. யாழ்.மனோகரா தியேட்டருக்கு அண்மையில் 2 ½ பரப்பில் அமைந்த வீடும் காணியும்
06. யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 32 அடி அகலமும் 216 அடி நீளமும் கொண்ட 2 கடைகளும்
07. யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக 11 அடி அகலமும் 100அடி நீளமும் கொண்ட மாடிக்கடையும்
08. யாழ்.CTB பஸ்தரிப்பிடத்திற்குப் பின்பாக மின்சார நிலைய வீதியில் 16 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட 2 மாடிக்கடைகளும்
09. யாழ்.மருதனார்மடம் சந்திக்கு அண்மையில் 5பரப்புக் காணியும் வீடும்
10. யாழ்.கே.கே.எஸ் வீதி தாவடிச்சந்திக்கு அண்மையில் 2½ பரப்பில் அமைந்த புதிய மாடிவீடும்
11. யாழ்.கே.கே.எஸ் வீதி தாவடிச் சந்திக்கு இடையில் 6 பரப்பில் அமைந்த காணியும் வீடும் உடன் விற்பனைக்குண்டு.

**077 723 2535**

(C-3558)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. [illegible] என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.